Sree Annapoorna Sree Gowrishankar the pride of coimbatore Restaurant - Sweets - Event Catering

# தி கோவை மெயில்

தமிழ் & ஆங்கில வார இதழ்

ஸ்ரீ அன்னபூர்ணா ஸ்ரீ கௌரிசங்கர் கோவையின் பெருமை ரெஸ்டாரன்ட் - ஸ்வீட்ஸ் - ஈவென்ட் கேட்ரிங்

RNI: TNBIL/2014/55455 | Postal Reg.No: CB/123/2021-23.

கோவை | சென்னை | திருப்பூர் | ஊட்டி | குன்னூர் | கோத்தகிரி | பொள்ளாச்சி | பழனி

Vol No. : 10 Issue No. : 8 www.covaimail.com www.facebook.com/THE COVAI MAIL ஞாயிறு, மே 21 - 27, 2023, 8 பக்கங்கள், ரூ.5/- ஆண்டு சந்தா - ரூ.260/-

# நந்தினியின் கனவை நனவாக்கிய பி.எஸ்.ஜி!

✍ தி கோவை மெயில்

நூறாண்டுகளுக்கு முன்பு அனைத்துத் தரப்பு மக்களும் கல்வி பெற வேண்டுமென்ற ஒப்பற்ற நோக்கில் சர்வஜன பள்ளியுடன் தொடங்கப்பட்டதுதான் பி.எஸ்.ஜி. அறநிலைய கல்விப்பணிகள் ஆகும். இன்று அந்த கல்விச்சேவை மழலையர் பள்ளி தொடங்கி, மருத்துவக் கல்லூரி வரை பரந்து, விரிந்து செயல்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு 12ம் வகுப்பு தேர்வில் 600க்கு 600 மதிப்பெண் பெற்று சாதனை படைத்த நந்தினியை தமிழ்நாடு முதல்வர், பாராட்டி இருக்கிறார். கவிப்பேரரசு வைரமுத்து மாணவியின் இல்லம் தேடிச்சென்று தங்கப் பேனா பரிசளித்திருக்கிறார். இதற்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல கோவை பி.எஸ்.ஜி. அறநிலையம் அந்த மாணவிக்கு ஒரு பரிசை வழங்கியிருக்கிறது.

அதுதான் அந்த மாணவியின் வாழ்நாள் கனவான சார்ட்டட் அக்கௌன்டண்ட் படிப்பு. அதற்கான அடிப்படையாக அந்த மாணவிக்கு பி.எஸ்.ஜி. கலை, அறிவியல் கல்லூரியில் பி.காம். ப்ரொபஷனல் அக்கவுண்டிங் படிப்பில் சேர்க்கைக்கான அனுமதி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. சேர்க்கை மட்டுமல்ல, மூன்று ஆண்டுக் கல்வி கட்டணம், விடுதிக்கான கட்டணம், உணவுக் கட்டணம் என அனைத்துச் செலவுகளையும் பி.எஸ்.ஜி. அறநிலையமே ஏற்றுக் கொள்ளும் என்று அதன் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன் தெரிவித்திருக்கிறார்.

இதுபோன்று கல்வியில் சிறந்த மாணவர்களின் எதிர்காலம் சிறந்து விளங்கிடவும், நமது மாநிலம் கல்வி சிறந்த தமிழ்நாடாக மாறிடவும் பி.எஸ்.ஜி. அறநிலையத்தின் பங்களிப்பு போற்றப்பட வேண்டியதாகும். நமது தி கோவை மெயில் வார இதழும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.



மாணவி நந்தினியை பரிசளித்து கௌரவிக்கிறார் பி.எஸ்.ஜி. அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் எல்.கோபாலகிருஷ்ணன்.

**நந்தினி எனும் மாணவிக்கு அனுமதி மட்டுமல்ல, மூன்று ஆண்டுகளுக்கான கல்வி கட்டணம், தங்கும் விடுதிக்கான கட்டணம், உணவு கட்டணம் என அனைத்து செலவுகளையும் பி.எஸ்.ஜி. அறநிலையே ஏற்றுக் கொள்ளும்.**

## நன்றிகள் பல!

இது குறித்து நம்மிடம் பேசிய மாணவி நந்தினியின் தந்தை சரவணக்குமார், 'சாதாரண தச்சு வேலை செய்து வரும் எனக்கும், எனது குடும்பத்தினருக்கும் இந்த தகவல் பெரும் சந்தோஷத்தைக் கொடுத்துள்ளது.

எனது மகளுக்கு பி.எஸ்.ஜி கல்லூரியில் இலவச சீட் கிடைத்திருப்பது பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

மேலும், படிப்பு மற்றும் தங்கும் விடுதிக்கான அனைத்து கட்டணங்களையும் கல்லூரி நிர்வாகத்தினர் ஏற்றுக்கொள்வதாக கூறியுள்ளனர். இது மட்டுமின்றி முதுநிலை படிப்பிற்கான உதவிகளையும் செய்வதாக தெரிவித்துள்ளனர் இதற்க்கு நன்றி தெரிவித்துகொள்கிறேன்.

நான் பல வருடங்களுக்கு முன்பு வேலைக்காக கோயம்புத்தூருக்கு அழைத்துவரப்பட்டேன். எனது மகள் இதுவரை கோயம்புத்தூருக்கு வந்ததில்லை. முதல் முறையாக கோயம்புத்தூர் வரும் எனது மகள் பி.எஸ்.ஜி கல்லூரியில் சேர்வதற்காகவே வருகிறார்' என பெருமிதத்துடன் தெரிவித்தார்.

## சிபிஎஸ்இ தேர்வு முடிவுகளில் சிறந்து விளங்கிய அமிர்தா வித்யாலயம் மாணவர்கள்

✍ தி கோவை மெயில்

2023ம் ஆண்டு 10 மற்றும் 12ம் வகுப்பு சிபிஎஸ்இ வாரியத் தேர்வுகளை திருப்பூர் அமிர்தா வித்யாலயம் மாணவர்கள் எழுதினர். இதில் 10ம் வகுப்பு மாணவர் சிவகுமாரன் 96.8 சதவீதம் பெற்று முதலிடமும், ஸ்ரீமுகி 96.4 சதவீதம், ப்ரனேஷ் 96 சதவீதம் பெற்று இரண்டாமிடமும் பெற்றனர். அதேபோல் 12ம் வகுப்பு மாணவர் முகுந்த் 95.8 சதவீதத்தில் முதலிடமும் தருணமணி, பிரக்யா ஆகியோர் 90.8 சதவீதத்தில் இரண்டாமிடமும் பெற்றனர். மேலும், சிவகுமாரன் கணிதத்திலும், தருணமணி தகவல்பயிற்சியிலும் 100 சதவீதம் மதிப்பெண்பெற்றனர். மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளை பள்ளி நிர்வாகத்தினர், முதல்வர், ஆசிரியர்கள், பெற்றோர்கள் பாராட்டினர்.

## 22ல் வேளாண் பல்கலையில் வேளாண் ஏற்றுமதி, இறக்குமதி பயிற்சி

✍ தி கோவை மெயில்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தில் ஐந்து நாட்கள் வேளாண் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பயிற்சி மே 22 முதல் 26 வரை வழங்கப்படுகிறது.

உழவர்கள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பெண்கள், இறுதி ஆண்டு பட்டதாரிகள், இளைஞர்கள், தொழில்முனைவோர்கள் பங்குபெறலாம். வேளாண் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பற்றிய அனைத்துத் தகவல்களும் ஒருங்கிணைந்து வழங்கப் படுகின்றது. கட்டணமாக நபருக்கு ரூ. 11,800 வசூலிக்கப்படுகிறது. குறைந்த எண்ணிகையிலான இடங்களே (20 நபர்கள்) உள்ளன.

மேலும் விவரங்களுக்கு, **business@tnau.ac.in** மற்றும் 0422 6611310, 99949 89417 என்ற எண்களில் தொடர்புகொள்ளலாம்.

# ரோட்டரி கிளப் மெட்ரோபோலிஸ் 'நிழல் நிஜமாகிறது' இசைநிகழ்ச்சி







ரோட்டரி கிளப் கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் சார்பில் சுபஸ்ரீ தணிகாசலம் மற்றும் குழுவினரின் "நிழல் நிஜமாகிறது" என்ற இசை நிகழ்ச்சி கோவை கிக்கானி பள்ளியில் நடைபெற்றது. சிறப்புவிருந்தினராக திரைப்படப் பாடகர் சீனிவாஸ் கலந்துகொண்டார்.

# கே.பி.ஆர். கலைக் கல்லுரியில் ஆண்டு விழா



வேலைவாய்ப்பு பெற்ற மாணவிக்கு பணிநியமன ஆணையுடன் விருது வழங்குகிறார் அவினாசிலிங்கம் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் குழந்தைவேலு. அருகில், சென்னை எம்பாசிஸ் இந்தியா கேம்பஸ் லீட் ஜோசுவா டேவிட், கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி, கல்லூரியின் முதல்வர் கீதா, கல்லூரியின் முதன்மை நிர்வாகி பாலுசாமி.

✍ தி கோவை மெயில்

கே.பி.ஆர். கலை, அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் நான்காம் ஆண்டு, 'உற்சவம் 23' என்ற ஆண்டு விழா மற்றும் வேலைவாய்ப்பு தின விழா அண்மையில் நடைபெற்றது.

அவினாசிலிங்கம் பல்கலை. முன்னாள் துணைவேந்தர் குழந்தைவேலு தலைமை விருந்தினராகவும், சென்னை எம்பாசிஸ் இந்தியா கேம்பஸ் லீட் ஜோசுவா டேவிட் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

கே.பி.ஆர். குழுமங்களின் தலைவர் கே.பி.ராமசாமி தலைமையுரை வழங்கிச் சிறப்பித்தார். அதனைத் தொடர்ந்து பேசிய தலைமை விருந்தினர் குழந்தைவேலு, மாணவர்கள் தம் வாழ்க்கையில் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூக அக்கறை முதலியவற்றைக் கைக்கொள்ள வேண்டும். தம்முடைய உடலையும், மனதையும் பேண வேண்டும். அத்தோடு, பழமையான மரபுகளை அறிந்து, அதன்வழியில் கலாச்சாரத்தோடு வாழ வேண்டும் எனவும் தெரிவித்தார்.

சிறப்பு விருந்தினர் ஜோசுவா டேவிட் பேசுகையில், மாணவர்கள் கல்வி மற்றும் வாழ்வியலில் மேம்பட்டு, தொழில் நிறுவனங்களில் திறம்பட செயலாற்றுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார். தன் தனித்திறனை அறிந்து பிறருக்கு உதவும் மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டுமெனவும் எடுத்துரைத்தார்.

தொடர்ந்து, 2022 23 ஆம் ஆண்டிற்கான சிறப்பு விழா மலர் வெளியிடப்பட்டது. பின்னர், சிறந்த பேராசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும் சிறந்த துறைக்கு விருதுகள் வழங்கப்பட்டன. மேலும், கல்லூரியில் பயிலும் காலத்திலேயே கல்வியில் சிறந்து, வேலைவாய்ப்பு பெற்ற மாணவர்களுக்குப் பணிநியமன ஆணையுடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் புல முதன்மையர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் 800க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர்.

## 371 பேருக்கு பணி நியமன ஆணைகள் வழங்கிய மத்திய இணை அமைச்சர்

✍ தி கோவை மெயில்

கோவையில் நடைபெற்ற ரோஜ்கார் மேளா நிகழ்ச்சியில் மத்திய இணை அமைச்சர் ஜான் பர்லா, 371 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

மத்திய, மாநில அரசுத் துறைகளில் புதிதாகப் பணியமர்த்தப்பட்ட சுமார் 71,000 பணியாளர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி காணொலிக்காட்சி மூலம் பணி நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்ச்சி நாடு முழுவதும் 45 இடங்களில் நடைபெற்றது.

கோயம்புத்தூர் குனியமுத்தூர் பகுதி ஸ்ரீ கிருஷ்ணா கல்வி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில், சிறுபான்மையினர் நலன் அமைச்சக மத்திய இணை அமைச்சர் ஜான் பர்லா சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து அஞ்சல் துறை, தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் மற்றும் இரயில்வேத் துறையில் புதிதாக பணியமர்த்தப்பட்ட 371 பேருக்கு பணி நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. 25 பேருக்கு நேரடியாக மத்திய இணை அமைச்சர் கடிதங்களை வழங்கினார்.

'ரோஜ்கர் மேளா' என்பது வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு அதிக முன்னுரிமை அளிக்கும் பிரதமரின் உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கான ஒரு முயற்சியாகும்.

ADVERTORIAL

Sri Ramakrishna Hospital (Multi-Speciality)

Integrated Brain & Mind Care™ buddhi CLINIC

## ஆட்டிஸம் குறைபாடு

பன்னோக்கு நுண்ணறிவு, மாற்று கல்விக்கான வழிமுறை

'விதியை மீறி ஒரு மாற்றுத்திறனை புனரமைக்க முடியுமா என்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. திறமை என்று சொல்வதை விட அவற்றை நுண்ணறிவு எனச்சொல்வதே சிறந்தது,' – ஹோவர்ட் கார்டனர்.

பிரபல ஹாவார்டு மனோதத்துவ நிபுணர் பேராசிரியர் ஹோவர்ட் கர்டனர், ' நுண்ணறிவு என்பது ஒரு ஒற்றை அமைப்பு அல்ல. மொழி, தர்க்கம், வாதம், கணிதம், இடம்சார்ந்த விழிப்புணர்வு, உடல் மொழி, இசை தனிபட்ட திறன்கள் ஆகியவற்றை அறிவின் சில வகைகள்' என்கிறார். ஆட்டிசம் எனப்படும் மனஇறுக்கம் சார்ந்துள்ள மற்ற இடர்பாடுகளை சந்திப்பவர்கள் மற்றும் அதிகமாக செயல்திறன் உள்ள ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள், இசை கணிதம் போன்றவற்றில் 'மாற்றுத்திறன்' உடையவர்களாக இருப்பர். இந்த திறன்களை சரியாக அவர்களுக்குள் உள்ள தனித்துவத்தை கண்டறியும்போது, வாழக்கையின் அர்த்தத்தை அறிவர். பிறருடன் சேர்ந்து செயல்படுவது மற்றும் கலந்துரையாடுவதில் சிரமங்களை கடந்து செயல்பட வாய்ப்பாக அமையும்.

புத்தி கிளினிக், ஆட்டிசம் உள்ளவர்களுக்கு, குறிப்பாக குழந்தைகள் முதல் வயதுவந்தவர்கள் வரை அவர்களது திறமையை கண்டறிய அர்ப்பணிப்பு உணர்வுடன் உதவுகிறது. புனிதமிக்க அணுகுமுறையால், பல்வேறு சமயங்களில் அவர்களது வாழ்வியலை உணர்த்துகிறது. மறைமுகமான வலியாலும், அசௌகரியத்துடனும் வாழ்வதை மாற்றுகிறது.

ஆட்டிசத்திற்கு உட்பட்ட குழந்தைகள், வயது வந்தோர் மற்றும் இளைய வயதினருக்கு புத்தி கிளினிக்கில் அவர்களது எதிர்கால பாதையை காட்ட வழங்கப்படும் ஆலோசனைகள்: அவர்களது திறமை என்ன என்பதை அறிந்து அவற்றை ஒருமுகப்படுத்தி உதவுகிறது. இசை, உணர்வுகளை வெளிப்படுத்துவதாக மட்டுமின்றி, பிற நுண்ணறிவுகளை வெளிப்படுத்தும் விதமாக ஊக்குவிக்கிறது. பல்வேறு நரம்பியல் பாதைகளை ஒருங்கிணைப்பு செய்யும் வகையில் பயிற்சிகள் தரப்படுகின்றன.

புத்தி கிளினிக்கின் இந்த ஒருங்கிணைந்தஅணுகுமுறை, அதிநவீன தூண்டுதலாக (rTMS & tDCS), இருக்கும். பன்னோக்கு நுண்ணறிவு ஒரு மனோதத்துவ பணியாக (பழக்க வழக்க மேலாண்மை மற்றும் எண்ணம் செயல்பாடுகளில் மாறுபடாத தூண்டுதல்) நரம்பு மேன்மைக்கான சிகிச்சை, பேச்சுக்கான சிகிச்சை, ஆயுர்வேதம், இயற்கை மருத்துவம் மற்றும் யோகா போன்றவையால், தங்களது திறமையை என்ன என்பதை கண்டறிய உதவுகிறது.

நமது சமுதாயத்தில், 'ஆட்டிசம் ஸ்பெக்ட்ரம் டிஸார்டர்' எனப்படும் மனஇறுக்கத்தின் சுமையை குறைக்க, கிளினிக்கில் நிபுணத்துவமிக்க பன்னோக்கு அறிவுசார் பயிற்சிகள் உள்ளன. மருந்துகளுக்கும் மேலாக இந்த பயிற்சிகள் அமைகின்றன. இசை (ஆன்மிக மந்திரங்களுடன்), கணிதம் மற்றும் பிற திறன்கள் (பகுத்தறிதல் மற்றும் வடிவமைத்தல்), பேச்சுத்திறன் பயிற்சிகள் (எழுதுதல், பாடல்கள்) கலை பொருட்கள் செய்தல் (பல விற்பனையும் செய்யப்பட்டுள்ளன) போன்றவை கற்றுத்தரப்படுகின்றன.

கோவையில் அடுத்த முகாம்: 22.05.2023

memory • mobility 3m mindcare

To know more, visit **www.buddhiclinic.com** or contact **9500010066** (Coimbatore) & **9500010056** (Chennai)



# அமைச்சரவையில் மாற்றம் : ஸ்டாலின் கணக்கு என்ன?

✍ **சாணக்கியன்,** தி கோவை மெயில்

மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு 2021 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றது. மு.க.ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்ற பிறகு அவரது அமைச்சரவை மூன்றாவது முறையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 2022 மார்ச் மாதம் நடைபெற்ற அமைச்சரவை மாற்றத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த ராஜகண்ணப்பன் மாற்றப்பட்டு, அவருக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அவருக்கு பதிலாக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சராக இருந்த சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சராக நியமனம் செய்யப்பட்டார். 2022 டிசம்பர் மாதத்தில் மீண்டும் ஒருமுறை தமிழக அமைச்சரவையில் மாற்றம் நடந்தது. இம்முறை பல அமைச்சர்களின் துறைகள் மாற்றப்பட்டன. கூடுதலாக, உதயநிதி ஸ்டாலின் புதிய அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அவருடன் சேர்த்து தமிழ்நாடு அமைச்சரவை எண்ணிக்கை 35ஆக உயர்ந்தது. நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டது. இந்த நிலையில், அமைச்சரவையில் மாற்றம் இருக்கும் எனக் கடந்த சில நாள்களாக தகவல்கள் வெளியாகி வந்தன.

இந்நிலையில் மே 9 ஆம் தேதி ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பரிந்துரையின்பேரில், பால் வளத்துறை அமைச்சராக இருந்த சா.மு. நாசர் நீக்கப்பட்டு, அந்தத் துறைக்கு மன்னார்குடி சட்டமன்ற உறுப்பினர் டி.ஆர்.பி. ராஜா புதிய அமைச்சராக பதவியேற்றார். அவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணமும், இரகசியக் காப்பு உறுதிமொழியும் செய்துவைத்தார்.

தொடர்ந்து, அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகள் குறித்த அறிவிப்பு வெளியானது. அதன்படி, புதிதாகப் பதவியேற்ற டி.ஆர்.பி.ராஜாவுக்கு தொழிற்துறை ஒதுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே தொழிற்துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசுவுக்கு நிதி மற்றும் மனித வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.மேலும், அவருக்கு ஓய்வூதியம் மற்றும் புள்ளியியல், தொல்லியல் துறையும் ஒதுக்கப்பட்டுள்ளது.

செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கு தமிழ் வளர்ச்சித் துறை கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது. நிதியமைச்சராக இருந்த பழனிவேல் தியாகராஜனுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை ஒதுக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்ப அமைச்சராக இருந்த மனோ தங்கராஜுக்கு பால் வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

### நாசர் நீக்கம் ஏன்?

1980 ஆம் ஆண்டுகளில் திமுக இளைஞரணி செயலாளராக மு.க.ஸ்டாலின் இருந்த காலகட்டத்தில், அன்றைய ஒருங்கிணைந்த செங்கல்பட்டு மாவட்ட இளைஞரணியில் முக்கிய நிர்வாகியாக ஆவடி நாசர் இருந்தார். மு.க.ஸ்டாலின் மேற்கொள்ளும் சுற்றுப் பயணங்களிலும் அவருடன் சென்று வந்தார்.

2016 தேர்தலில் அதிமுகவின் மாஃபா பாண்டியராஜனிடம் தோற்ற நாசர், 2021ல் வெற்றி பெற்று பால் வளத்துறை அமைச்சரானார். அமைச்சராக பதவியேற்ற உடன், தீபாவளி நேரத்தில் ஒன்றரை டன் ஆவின் இனிப்புகளை முன்னாள் அதிமுக அமைச்சர் ராஜேந்திர பாலாஜி தனது வீட்டுக்கு எடுத்துச் சென்று விட்டதாகக் கூறி பரபரப்பை ஏற்படுத்தினார்.

### மகனால் பறிபோன பதவி:

ஆவடி மாநகரச் செயலாளராக திமுகவில் கட்சிப் பொறுப்பை வகித்து வந்த ஆவடி நாசரின் மகன் ஆஷிம் ராஜா, கடந்த பிப்ரவரியில் அப்பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார். அப்போதே நாசரும் அமைச்சரவையில் இருந்து நீக்கப்படலாம் என செய்திகள் உலா வந்தன. ஆவடியில் உள்ள காவல்துறைக்குச் சொந்தமான இடத்தில் திமுகவின் கொடியை நட்டி கடைகள் போடப்பட்டன.

ஆவடி மாநகராட்சியில் வரும் அனைத்து டெண்டர்களையும் தாங்களே எடுத்துக்கொண்டது, மாநகராட்சி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்காமல் அலைக்கழிப்பு செய்தது உள்ளிட்ட பல்வேறு புகார்கள் ஆவடி நாசரின் மகன் மீது வைக்கப்பட்டன. இவை தவிர, துறை ரீதியாகவும் ஆவடி நாசர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் கூறப்படுகின்றன.

ஆவின் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் இருந்த 25,410 மெட்ரிக் டன் பால் பவுடரையும், 6 டன் வெண்ணையையும் குறைவான விலைக்கு 2 ஆண்டுகளில் விற்பனை செய்து விட்டதாகக் கூறப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு 40 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்த நிலையில், தற்போது சுமார் 28 லட்சம் லிட்டர் வரை மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பால் உற்பத்தியாளர்கள் தனியார் நிறுவனங்களுக்கு பால் ஊற்றுவதால் ஆவின் நிறுவனத்துக்கு பால் தட்டுப்பாடு ஏற்பட்டு உள்ளது. இதை சமாளிக்க மகாராஷ்டிரம், குஜராத் உள்ளிட்ட வெளி மாநிலங்களில் இருந்து பால் பவுடரை வாங்கி ஆவின் நிறுவனம் பால் தயாரித்து வருகிறது. பால் பவுடர் மூலமாக உற்பத்தி செய்யப்படும் ஒரு லிட்டர் பாலுக்கு 60 ரூபாய் வரை செலவாகும் நிலையில், அது 42 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ஒரு லிட்டர் பாலுக்கு அரசுக்கு 18 ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டுகிறது. இதனால் ஏற்படும் நிதி நெருக்கடியை சமாளிக்க பால், ஐஸ்கிரீம், வெண்ணை போன்ற பொருட்களின் விலை நான்கு முறை அதிகரிக்கப்பட்டன.

வரலாற்றில் இதுவரை இல்லாத வகையில் ஆரஞ்சு பால் விலையும் லிட்டருக்கு 12 ரூபாய் வரை உயர்த்தப்பட்டது. இந்த பாதிப்புகள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது. எனினும் நெருக்கடியில் இருந்து துறையை மீட்பதற்கான எந்த முயற்சியும் எடுக்காமல் இருந்ததால், அமைச்சர் மாற்றப்படுவதாகத் துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

**வளர்ந்து வரும் நாம் தமிழர் கட்சி டெல்டா மாவட்டங்களில் குறிப்பாக அகமுடையார், கள்ளர் சமூக வாக்குகளைக் குறி வைத்து காய் நகர்த்தி வருகிறது. அதேபோல, ஓபிஎஸ், சசிகலா, டிடிவி தினகரன் ஆகியோர் இணைந்து செயல்பட உள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களில் கள்ளர், அகமுடையார் வாக்கு வங்கி திமுகவில் இருந்து பிரிந்து சென்றுவிடுமோ என்ற அச்சமும் முதல்வர் ஸ்டாலினுக்கு ஏற்பட்டுள்ளது. இதை மனதில் வைத்துத்தான் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்த டிஆர்பி. ராஜாவுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டள்ளது.**

அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட நாசர், பூந்தமல்லி அடுத்த சென்னீர்குப்பம் ஊராட்சியில் நடந்த திமுக பொதுக்கூட்ட மேடையில் ஏறாமல், அப்படியே காரில் வேகமாக கிளம்பிச் சென்றார். அதைத் தொடர்ந்து நடந்த இரண்டு கூட்டங்களில் சில நிமிடங்கள் மட்டுமே பேசிவிட்டு வாடிய முகத்துடன் கிளம்பினார்.

முன்னதாக சில மாதங்களுக்கு முன்பு திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கட்சிக்காரர் நாற்காலி எடுத்து வரத் தாமதமானதால், அவரை அடிக்க கல்லைக் கொண்டு ஓங்கியது, மிகப்பெரிய சர்ச்சையை ஏற்படுத்தியது. மகனின் தனி ஆவர்த்தனமும், நிர்வாகக் காரணங்களும் சேர்ந்து ஆவடி நாசரின் அமைச்சர் பதவியை காலி செய்ததாக கோட்டை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

### பிடிஆர் மாற்றம் ஏன்?

நிதி அமைச்சர் பதவியில் இருந்து தகவல் தொழில்நுட்ப அமைச்சராக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறார் பிடிஆர்.பழனிவேல். அவரது ஆடியோ கசிந்து சமூக ஊடகங்களில் வைரலானது, தமிழக அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியது. அதுமட்டுமன்றி நிதி அமைச்சர் கறாராக செயல்படுவதாக அமைச்சர்கள், ஆளும் கட்சி எம்.எல்.ஏ.க்கள், அரசு ஊழியர்கள் குற்றஞ்சாட்டினர்.

ராஜஸ்தான், சத்தீஷ்கர் போன்ற மாநிலங்களில் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்பட்ட நிலையில், தமிழகத்தில் திமுக கொடுத்த தேர்தல் வாக்குறுதிப்படி பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த பிடிஆர் தான் முட்டுக்கட்டையாக இருக்கிறார் என்ற பேச்சு அரசு ஊழியர்களிடம் எழுந்துள்ளது. திமுகவின் முக்கிய வாக்கு வங்கிகளில் ஒன்றான அரசு ஊழியர்கள் அதிருப்தியில் இருப்பதையும் முதல்வர் ஸ்டாலின் ரசிக்கவில்லை.

இருப்பினும், அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்கினால் பிடிஆர் ஆடியோவில் பேசியதை உண்மை என ஒத்துக்கொண்டதுபோல ஆகிவிடும் என்பதால், இப்போதைக்கு அவரை வேறு துறைக்கு மாற்றியுள்ளார் ஸ்டாலின்.

### நம்பிக்கை நாயகன் தங்கம் தென்னரசு:

தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் மனோ தங்கராஜின் செயல்பாடுகள் மீது முதல்வர் ஸ்டாலினுக்குத் தொடர்ந்து அதிருப்தி ஏற்பட்டு வந்தது. எனவே, அவரிடம் இருந்த முக்கிய துறையான தகவல் தொழில்நுட்பத்துறை, பிடிஆருக்கு மாற்றப்பட்டு, மனோ தங்கராஜுக்கு பால் வளத்துறை ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் துறை அமைச்சராக இருந்த தங்கம் தென்னரசு மீது, ஸ்டாலினுக்கு முழு நம்பிக்கை எப்போதும் இருந்து வருகிறது. 2006 முதல் 2011 வரை கருணாநிதி தலைமையிலான திமுக ஆட்சியில் பள்ளிக் கல்வி அமைச்சராக தங்கம் தென்னரசு சிறப்பாக செயல்பட்டார்.

கொடுக்கும் வேலையை குறைவின்றி சிறப்பாக செய்வதில் தங்கம் தென்னரசு வல்லவர். அதேபோல, தேர்தல் களத்திலும் தொடர்ந்து வெற்றிக்கனியை பறித்து வருகிறார். 2006, 2011, 2016, 2021 எனத் தொடர்ந்து எம்.எல்.ஏ.வாக வெற்றி பெற்றுள்ளார். தமிழகத்தில் முக்கியமான துறையான நிதித்துறையை அதிக பொறுப்புமிக்க, நம்பிக்கைக்குரியவர் கையாள வேண்டும் என்பதற்காக தங்கம் தென்னரசுவிடம் நிதித்துறையை ஸ்டாலின் ஒப்படைத்துள்ளார்.

### டிஆர்பி ராஜாவுக்கு ஏன் அமைச்சர் பதவி?

திமுகவின் பொருளாளரும், மூத்த நிர்வாகியும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலுவின் மகன் டிஆர்பி ராஜாவுக்கு தொழில்துறை வழங்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களுக்கு திமுக அமைச்சரவையில் உரிய பிரதிநிதித்துவம் இல்லை என்கிற குறை இதன் மூலம் நீங்கியுள்ளது.

டெல்டா மாவட்டங்களுக்கான பிரதிநிதியாக தன்னை முதல்வர் ஸ்டாலின் ஏற்கெனவே அறிவித்தார். இருப்பினும், திமுகவின் தொடக்கக் காலத்தில் இருந்தே (1957 பேரவைத் தேர்தல்) முதல் உறுதுணையாக இருக்கும் டெல்டா மாவட்டங்களுக்கு அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் கிடைக்காதது அப்பகுதி மக்களிடம் அதிருப்தியை உருவாக்கியது.

மேலும், வளர்ந்துவரும் நாம் தமிழர் கட்சி டெல்டா மாவட்டங்களில் குறிப்பாக அகமுடையார், கள்ளர் சமூக வாக்குகளை குறி வைத்து காய் நகர்த்தி வருகிறது. அதேபோல, ஓபிஎஸ் சசிகலா டிடிவி தினகரன் ஆகியோர் இணைந்து செயல்பட உள்ள நிலையில், டெல்டா மாவட்டங்களில் கள்ளர், அகமுடையார் வாக்கு வங்கி திமுகவில் இருந்து பிரிந்து சென்றுவிடுமோ என்ற அச்சமும் முதல்வர் ஸ்டாலினுக்கு ஏற்பட்டுள்ளது.

இதை மனதில் வைத்துத்தான் அகமுடையார் சமூகத்தைச் சேர்ந்த டிஆர்பி.ராஜாவுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டள்ளது. மேலும், எதிர்க்கட்சி அந்தஸ்துகூட வர முடியாத அளவுக்கு திமுக மோசமாகத் தோற்ற 2011 பேரவைத் தேர்தலில் மன்னார்குடி தொகுதியில் அறிமுக வேட்பாளராக களம் இறங்கி வெற்றி பெற்ற டிஆர்பி.ராஜா, தொடர்ந்து 2016, 2021 பேரவைத் தேர்தல்களில் வெற்றி வீரராக வலம் வருவதாலும், திமுகவின் மூத்த நிர்வாகியின் மகன் என்பதாலும் டிஆர்பி.ராஜாவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட்டிருப்பதாக திமுக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் பற்றி வெளிவந்த ஆடியோவே அனைத்து பிரச்னைகளுக்குமான ஆரம்பப் புள்ளியாக இருக்கிறது. ஒருவேளை பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன் அமைச்சரவையில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் அது அரசுக்கு மிகப்பெரிய தலைகுனிவை ஏற்படுத்தி இருக்கும். அதேவேளையில் அவர் அதே துறையில் அமைச்சராகத் தொடர்ந்து இருந்தால் அது கட்சி நிர்வாகிகள் மத்தியிலேயே மிகப்பெரிய கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கும்.

இந்நிலையில் இதை சரிக்கட்ட அவரது இலாகாவை மட்டும் மாற்றி அமைச்சராகவே தொடரச் செய்துள்ளார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். இவ்வாறு செய்வதன் மூலம் இரு தரப்பினரையும் திருப்திப்படுத்த முயன்றுள்ளார். பொதுவாகவே திமுகவில் இஸ்லாமியர்களுக்கான பிரதிநிதித்துவத்தை மிகவும் கண்ணும் கருத்துமாக பார்ப்பது வழக்கம், காரணம், ஃபிக்ஸட் டெபாசிட்போல அவர்கள் திமுகவின் வாக்கு வங்கியாக பாஜக எதிர்ப்பு எனும் புள்ளியில் இருக்கிறார்கள்.

ஆனால் தற்பொழுது அதையும் மீறி நாசரை அமைச்சர் பதவியில் இருந்து இறக்கியதற்கு வேறு காரணங்களும் இருக்கிறது. ஒருவேளை நாசர் மற்றும் அவரது மகன் மீது உள்ள குற்றச்சாட்டுகளையும் புறம்தள்ளி சமூகத்தை காரணம் காட்டி அவரை அமைச்சர் பதவியில் தொடர வைத்திருந்தால் அது திமுகவின் ஹிந்து வாக்குகளில் நஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கக்கூடும். அண்ணாமலை தற்போதைய காலகட்டத்தில் செய்துவரும் அரசியலால் பெரிய அளவு பாதிப்பு இல்லை என்றாலும் சிறிய அளவிலாது ஹிந்து ஒற்றுமை என்பது ஏற்பட்டுள்ளது. அதையும் கணக்கில்கொண்டுதான் நாசரை அமைச்சர் பொறுப்பில் இருந்து வெளியேற்றினார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.



# “Let today mark the beginning of your Journey”

## - Gopalakrishnan, Managing Trustee, PSG Trust

✍ **Madhumitha** The Covai Mail

The Commencement Program for the class of 2023 of PSG Institute of Management and PSG Institute of Advanced Studies was held recently at PSG College of Technology, Coimbatore. The event was attended by distinguished guests, including Padma Shri Bajaj, Chairman of the Indian Council of Social Science Research, New Delhi, who delivered the commencement address.

The function was presided over by Gopalakrishnan, Managing Trustee of PSG Institutions and Srividya, Director i/c of PSG Institute of Management delivered the welcome remarks. Anne L. Balazs, Dean of John B. Lilley and E. Neff College of Business and Innovation from the University of Toledo, and Hassan R. HassabElnaby, Dean of Haile/US Bank College of Business, Northern Kentucky University, felicitated the graduating students and presented certificates.



In his Presidential Address, Gopalakrishnan acknowledged the significant disruptions that have characterized this era and their profound impact on global dynamics. He highlighted India’s rapid evolution as a prominent emerging economy, presenting substantial opportunities to the world. “PSG Institutions have been at the forefront of embracing the changes and contributing to the country’s growth over the years by adapting to changes and providing the best workforce”, he added.


Furthermore, Gopalakrishnan emphasized that success is not about fixing a goal, it is about moving towards a goal and experiencing growth. He congratulated the students by remarking, “Let today mark the beginning of your journey rather than the end.”

**“Success is not about fixing a Goal, it is about moving towards a Goal and Experiencing Growth”**

**- Gopalakrishnan,** *Managing Trustee, PSG Institutions*




*PSG MBA student receives degree certificate from the chief guest Padma Shri Bajaj along with Gopalakrishnan, Managing Trustee, PSG Institutions.*



During her congratulatory speech, Anne L. Balazs expressed, “We are linked forever, our Good Fortune is your good fortune, and your success fuels our tomorrow. You are going to change the world, and I’m the component of that.” She emphasized that an MBA program is both a Professional and Applied degree and urging the graduates to utilize their newly acquired skills to tackle contemporary challenges. She acknowledged their role as problem-solvers and emphasized the high demand for their skillset in today’s world. Balazs highlighted the University of Toledo’s commitment to nurturing students into lifelong, ethical business and academic leaders, fully prepared to confront global challenges.


She underscored the importance of earning the respect of colleagues and co-workers, emphasizing that it is not automatically bestowed but must be earned.

Balazs acknowledged the graduates’ pursuit of purpose and the desire to unleash their true potential, emphasizing their dedication to making the world a better place by applying their skills and talents on a broader scale.



In his address, Hassan emphasized the significance of setting high goals and cultivating self-awareness to unlock one’s full potential. “Aim high with excellence, when excellence becomes a habit, you can aim too high with confidence and achieve your goals”, he added. However, Hassan reminded them not to lose sight of what truly matters during their journey towards success.

He expressed that the Haile College of Business Education is committed to preparing students to navigate the rapidly changing global environment. He also said, “There is still more to learn, more to do, more to achieve and more to offer”. He encouraged the graduates to envision boundless dreams for themselves, their families, communities, and country. Hassan advised them not to fear for difficult decisions or failures, but rather to fear the missed opportunities that come from avoiding risks and shying away from failure.



The Chief Guest, Padma Shri Bajaj, delivered a speech focusing on the growth of the Indian economy and its GDP. He extended his congratulations to the students and highlighted the establishment of PSG & Sons’ Charities in the 1920s during the Nationalist movement. This establishment reflected India’s commitment and confidence at that time in rebuilding various aspects of society, quality, and the economy through a collective and individual approach.

The Chief Guest emphasized that the economy and society that the students will manage as managers and entrepreneurs are vastly different from what has been witnessed before. This situation presents both great opportunities and new challenges.

The chief guest asserted that the most direct path to achieving a developed India lies in the widespread improvement of education at all levels and attaining technological excellence across all ventures.

This aligns with the vision set forth by the PSG a century ago. He called upon everyone to invoke the same spirit and commitment today to fulfil the task of witnessing a developed India within the next 25 years.

Furthermore, the chief guest emphasized, “The faith and commitment in whichever religion we’re born are essential to preserving our human dignity and respecting the dignity of others.” He expressed that being committed to religion involves recognizing the presence of the divine within each individual and throughout nature. Inculcating and devoting oneself to such religious commitment is key to celebrating the oneness of India and fulfilling the responsibilities of Indian citizenship.

Overall, 244 students across 5 MBA programs including the University of Toledo and Northern Kentucky University received their Graduate Certificates.




## அவசரம் அவசரம்.. தீவிரம் தீவிரம்...

# பல உயிர்களை காப்பாற்றும்; கே.ஜி. அவசர சிகிச்சைப் பிரிவு

தி கோவை மெயில்

மனிதனின் சிந்திக்கும் திறனே இன்றையக் கண்டுபிடிப்புகளுக்கும், தொழில்நுட்ப வளர்ச்சிகளுக்கும் காரணம். இவ்வுலகில் கோடிக்கணக்கான உயிர்கள் இருந்தும் இந்த சிந்தனைக்கு சொந்தக்காரர்களான மனித இனமே இன்று தனித்து நடைபோட்டு சரித்திரங்கள் படைத்து வருகின்றது. மாற்றங்களை உருவாக்கும் ஆற்றல்களைக் கொடுக்கிறது நம் மூளை. மூளையைப் பாதுகாத்துக் கொள்ள தலை என்ற கவசத்தை வழங்கி நம்மைப் படைத்திருக்கிறது இந்த இயற்கை. விலை மதிப்பற்ற உயிரை இயக்கும் கருவியை நாம் நமது கருத்தில் வைத்துப் பார்த்துக் கொள்ள வேண்டும் தானே?

இந்நிலையில் தலையில் அடிபட்டால் ஏற்படும் பிரச்னைகள், மூளைச்சாவு அதனால் ஏற்படும் பின் விளைவுகள் என்ன? அடிபடும் போது நாம் எடுத்துக் கொள்ளவேண்டிய சிகிச்சைகள் என்ன? மூளைச்சாவு என்றால் என்ன என்பது குறித்து கே.ஜி.மருத்துவமனையின் தலைவர் டாக்டர் கே.ஜி.பக்தவத்சலத்திடம் கேள்வி யெழுப்பினோம். இதுகுறித்து அவர் கூறியதாவது:

கை, கால்களில் அடிபட்டால் முதலுதவி செய்ய முடியும். ஆனால், தலையில் அடிபட்டால் நிலைமை வேறு. முதலில் தலையில் அடிபட்டவர்கள் மூச்சுவிடுகிறார்களா? என்பதைக் கவனிக்கவேண்டும். நாடித்துடிப்பு இருக்கிறதா? என்பதைக் கவனிக்க வேண்டும். நினைவு இல்லை யென்றால் உடனடியாக ஆம்புலன்ஸ் மூலமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும். ஆம்புலன்ஸ்சில் முதலுதவி வசதிகள் இருக்கும். அடிபட்டவருக்கு வாந்தி போன்ற பின் விளைவுகள் இருந்தால் அதனை சுத்தப்படுத்த வேண்டும், அடிபட்ட இடத்தில் ரத்தம் வெளியேறினால் அதனைத்தடுத்துக் கட்டுப்போட வேண்டும். குறிப்பாக அனைத்துத் துறை மருத்துவர்களும் உள்ள ஒரு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

### காதுகளில் இரத்தம்

மூளைமுன்பகுதி, பின் பகுதி மற்றும் மத்தியப் பகுதி என மூன்றாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இதில் முன்பகுதியில் அடிபடும் போது மூக்கு, கண் பகுதியிலிருந்து இரத்தம் வரலாம். இரு பகுதிகளில் அடிபட்டால் காதிலிருந்து ரத்தம் வரும். பின்பகுதியில் அடிபடும் போது சுயநினைவு இழக்க நேரிடும். கண், காது, மூக்கு, தொண்டை, வாய்ப் பகுதிகளில் இரத்தம் வந்தால் உயிருக்கு ஆபத்து நேரிடும் வாய்ப்புகள் உள்ளன. ஆனால் தகுந்த மருத்துவமனை, சிகிச்சையால் உயிர்களைக் காக்க முடியும்.

### உச்சி முதல் பாதம் வரை

தலையில் அடிபட்டால், உச்சி முதல் பாதம் வரை அனைத்து உறுப்புகளும் நன்றாக உள்ளனவா என்பதை மருத்துவர்கள் பரிசோதனை செய்வார்கள். எலும்புகள் அடிபட்டுள்ளனவா? முதுகெலும்பு அடிபட்டுள்ளதா? என்பதையும் ஆய்வு செய்யவேண்டும். இந்த விஷயத்தில், அனுபவமிக்க மருத்துவர்களும், மருத்துவமனைகளே நல்ல சிகிச்சையைத் தர முடியும்.

மூளையில் அறுவை சிகிச்சை என்பது சவாலான ஒன்று. ஒவ்வொரு நரம்பும் பாதுகாக்கப் பட வேண்டியவை. அழுத்த மடைந்த நரம்புகள் போன்றவற்றைப் பாதுகாப்பாகக் கவனித்து செய்ய வேண்டும். ஏதேனும் கோடுகள் விழுந்தால், வலிப்பு நோய் வரலாம். ஏதாவது ஒரு குறிப்பிட்ட இடம் பாதிக்கப்பட்டால் பேச்சு வராமல் போகலாம். அடிபட்டதால் ஏற்படும் விளைவுகள் ஆறுமாதங்கள் முதல் ஒரு வருடத்திற்குள் தெரிய வரலாம்.

### பின் விளைவுகள்

அடிபட்டு மூளையில் ஏதாவது பாதிப்பு இருந்தால் பின்விளைவுகள் வரலாம். அதே போல்,மூளையில் தழும்புகள் ஏற்பட்ட ஒருவருக்கு வலிப்பு வரவும் வாய்ப்புள்ளது. அதற்கான மருந்துகளை எடுத்துக் கொண்டால் இதனைத் தவிர்த்துவிட முடியும். உயிரைக்காக்கவும், பாதிப்புகளைக் குறைக்கவும் தான் அறுவைசிகிச்சை மேற் கொள்ளப்படுகிறது. ஆகையால் அறுவை சிகிச்சையால் எவ்விதப் பின் விளைவுகளும் வராது.



டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி. மருத்துவமனை

### மயக்கம்

தலையில் அடிபட்டு வரும் ஒருவருக்கு சுய நினைவு இல்லாமல் இருக்கலாம். பக்கவாதம் ஏற்பட்டிருக்கலாம். அவருக்கு சிடி ஸ்கேன் எடுத்துப் பார்க்க வேண்டும். அடிபட்ட இடத்தில் 150 மி.லி. வரை இரத்தக்கட்டிகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. மூளைக்கு மேல் இரத்தக்கட்டி ஏற்பட்டால் மூளைக்கு அழுத்தம் ஏற்பட்டு பாதிப்புகள் ஏற்படலாம். சுய நினைவற்ற நிலைக்கும் செல்ல வாய்ப்புகள் உள்ளன. உயிரிழப்புக்கும் வாய்ப்புகளும் உள்ளன. எனவே, உடனடியாக சரியான மருத்துவனைக்கு அழைத்துச் செல்லவேண்டும். இரத்தம் உறைந்த இடத்தைத் துல்லியமாகஅறிந்து, அந்த இடத்தில் துளையிட்டு இரத்தக்கட்டியை முழுமையாக அகற்ற வேண்டும்.

தலையில் அடிபட்ட ஒருவருக்கு ஓரிரு நாட்கள் கழித்து இரத்தக்கசிவு ஏற்பட்டால் பேச்சுக்குளறுதல், தள்ளாட்டம், தலைவலி, சுய நினைவு இழக்கும் நிலை ஏற்படலாம். இந்த பிரச்னைக்கு இரத்தக் கட்டியை உறிஞ்சி எடுத்து விட்டால், உயிரைக் காக்க முடியும்.

### மூளைச் சாவு

மூளைச்சாவு குறித்து நாம் கேள்விப் பட்டிருப்போம். மூளைச்சாவு அடைந்த ஒருவரது மூளை மட்டும் இறந்திருக்கும். உடலில் சில செயல்பாடுகள் இருக்கும். ஆனால் நினைவு இருக்காது. கண் பார்வை இருக்காது. இரத்த அழுத்தம் இருக்கும். பிற செயல்பாடுகள் இருக்காது. மூளைச்சாவு ஏற்பட்டால், அரசு அனுமதியுடன் ஒரு நாள் சிகிச்சையில் வைத்திருந்து அவரது உறுப்புகளைத் தானமாக வழங்கலாம்.

பெற்றோர், நெருங்கிய உறவினர்களின் அனுமதி இருந்தால் மட்டுமே உறுப்புதானம் வழங்கமுடியும். தானங்களில் சிறந்த தானம் உறுப்பு தானம் தான். ஒருவர் உயிரிழந்தால் அவரால் 5 முதல் 6 பேருக்கு மறுவாழ்வு அளிக்க முடியும். இறந்தவர் உடலைப் புதைத்து விடாதீர்கள். மூளைச்சாவு ஏற்பட்டவுடன் உடல் தானத்திற்கு ஒப்புதல் அளியுங்கள். தமிழ்நாட்டில் தான் உடல் உறுப்பு தானம் அதிக அளவில் செய்யப்படுகிறது. இது நல்ல முயற்சி.

அவசர சிகிச்சைக்கு தொடர்பு கொள்ள 0422 2222222 என்ற எண்னை அழைக்கவும்.

## எமனையும் வெல்லலாம்

கே.ஜி மருத்துவமனையில் கடந்த 48 வருடமாக விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. சாலை விபத்து என்பது எதிர்பாராத தருணத்தில் நிகழும் ஒன்று. இதுபோன்ற நேரங்களில் விரைந்து மருத்துவமனைக்கு செல்வது அவசியம். இதன் மூலம் எத்தனையோ உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன.

எங்களது மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவில் 40 பேர் பணியாற்றுகின்றனர். அனைத்து விதமான பிரத்தியேக சிகிச்சைகளும் இங்கு அளிக்கப்படுகிறது.

விபத்து ஏற்படும்போது ஒருவருக்கு எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் அடிபடலாம். அதனால் அறுவை சிகிச்சை தேவைப்படும் பட்சத்தில், அதற்கான சிறப்பு மருத்துவர்களும், எந்த நேரத்திலும் அணுகும் வண்ணம் உள்ளனர்.

மாரடைப்பு, மூளைக்கு செல்லும் ரத்த ஓட்டம் தடைபடுதல், தற்கொலை செய்யும் முயற்சியாக விஷம் குடித்தல், விஷ ஜந்துக்கள் கடித்தல் ஆகியவையின் போது அவசர சிகிச்சைப் பிரிவை உடனடியாக அணுகுவது இன்றியமையாதது. இதில் தாமதிக்கும் நொடிகள் நோயாளியின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

அவசர சிகிச்சைப் பிரிவில் நோயாளிக்கு தேவையான உடனடி சிகிச்சைகள் அளிக்கப்பட்டப் பின்னர் தீவிர சிகிச்சை பிரிவிற்கு மாற்றப்படுவர்.

ஒரு சமயம், அதிக உடல் பருமன் கொண்ட, சர்க்கரை வியாதி உள்ள 70 வயது நபர் ஒருவர், கே.ஜி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உள்ளே வரும்போதே அவருக்கு பயங்கர நெஞ்சு வலி. தற்செயலாக அவரைப் பார்த்தேன். புதிதாத துவக்கப்பட்ட எமர்ஜென்சி பிரிவில் அவரை சேர்த்தோம். அன்றைய தினம் மருத்துவக் குழுவுக்கு ஒரு கேப்டன்போல், தலைமை பொறுப்பு எடுத்துக்கொண்டேன்.

டீம் ஒர்க், விரைவாக செயல்பட துவங்கியது. சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தபோது, திடீரென இருதய செயல்பாடு நின்றுபோனது. இருதய மசாஜ் கொடுக்கப்பட்டது. மசாஜ் கொடுக்கும்போது இருதயம் மீண்டும் செயல்பட துவங்கியது. மசாஜ் நிறுத்தியவுடன் மீண்டும் இருதயம் நின்றுவிட்டது. இப்படி தொடர் சவால், மருத்துவ குழு முன் எழுந்துகொண்டே இருந்தது.

நிலைமை விபரீதமாகி சென்றதால், ஒரு டாக்டர், "இனி கஷ்டம்தான் பிழைக்காது" என கைவிரித்தார். ஆனாலும், இளம் மருத்துவர்கள் தொடர்ந்து போராடினர். 12 பேர் கொண்ட மருத்துவ குழுவினர் கடுமையாக போராடி, இருதயத்துக்குள் டியூப் செலுத்தி, உறைந்துபோய் இருந்த ரத்தக்கட்டியை உறிஞ்சி எடுத்தனர்.

சில நிமிடம் கழித்து அந்த நபர் கண் திறந்து பார்த்தார். அவரின் மூளைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை. இந்த போராட்டம் எனது கண் முன்னே நடந்தது. மருத்துவ துறையில் எத்தனையோ அனுபவம் பெற்றாலும், இது புது அனுபவமாக இருந்தது. அன்றைய தினம், கே.ஜி மருத்துவ குழுவை நினைத்து பெருமைப்பட்டேன்.

## அவசர சிகிச்சை, தீவிர சிகிச்சை பிரிவு மருத்துவர்கள் குழு



Dr. பேபி கவிதா



Dr.ஜெயஷகிலா



Dr.மணிமொழி செல்வன்



Dr. செல்வகுமார்



Dr. அமிர்தலிங்கம்



Dr. கார்த்திகேயன்



Dr. பிரியதர்ஷன்



Dr. பிரபாகர்



Dr. சோனா குரியன்



Dr. ராஜேஷ்



Dr. ஜீவிதன்



Dr. விஜயபாஸ்கர்

## இந்த மூன்றும் தான் விபத்துக்கு காரணம்.. "நிதானம் ரொம்ப அவசியம்.."

### டாக்டர் கே.ஜி.பக்தவத்சலம், தலைவர், கே.ஜி. மருத்துவமனை

இன்றைய காலகட்டத்தில் வீட்டிற்கு வீடு வாகனங்கள் உள்ளன. இதனால் மக்கள் பொது போக்குவரத்து சாதனங்களை பயன்படுத்துவதும் கணிசமாகக் குறைந்துள்ளது. வாகனங்களை சொந்தமாக வைத்திருக்கும் பொதுமக்கள் அதனை முறையாக இயக்குகின்றனரா? என்பது மில்லியன் டாலர் கேள்வியாக உள்ளது.

சாலை விதிகளை கடைபிடிக்காமல் சென்று வாகன விபத்துகளில் சிக்குபவர்கள் அதான் அதிகம் என்கிறது புள்ளிவிவரங்கள். கோவை மாநகர பகுதியில் மட்டும் ஆண்டுக்கு 300க்கும் மேற்பட்டவர்கள் சாலை விபத்துகளில் சிக்கி உயிரிழந்து வரும் நிலையில், விபத்துகளுக்கு என்ன காரணம்? எப்படி இதனை தவிர்க்கலாம்? அவசர சிகிச்சைக்காக என்பது எவ்வளவு முக்கியம்? விபத்தில் சிக்கிய ஒருவர் எப்படிப்பட்ட மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்? என்பது குறித்து பல்வேறு கேள்விகளை கே.ஜி மருத்துவமனையின் தலைவர் டாக்டர் கே.ஜி.பக்தவத்சலத்திடம் முன் வைத்தோம், அவர் கூறியதாவது:

இந்தியாவில் ஆண்டுதோறும் 5 லட்சத்திற்கு மேற்பட்டோர் சாலை விபத்துகளில் சிக்குகின்றனர். இதில் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் உயிரிழப்பதாக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. ஒருவர் சாலை விபத்தில் சிக்குகிறார் என்றால் அதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன. தரமற்ற சாலைகளே விபத்திற்கு வழிவகுக்கும் முதல் முக்கிய காரணமாக உள்ளது. ஒரு குறிப்பிட்ட ஊரை குறிப்பிடாமல் பல நகரங்களை வைத்து பார்க்கையில் சாலைகளில் அமைக்கப்படும் வேகத்தடைகள் மீது வெள்ளை நிற வர்ணங்கள் பூசப்படுவதில்லை.

இதனால் அங்கு வேகத்தடைகள் இருப்பது தெரியாமல் வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்குகின்றனர். குண்டும் குழியுமான சாலைகளாலும் அதிக விபத்துகள் ஏற்படுகின்றன. நாம் எந்த ஊருக்கு சென்றாலும் ஊரின் நாகரீகத்தை பார்ப்பது அந்த ஊரில் உள்ள சாலைகளில் தான். சாலையை மக்கள் எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதை வைத்து தான் ஊர் எப்படி இருக்கும் என்பதை கனிக்கிறோம்.

அமெரிக்க போன்ற நாடுகளில் குடியிருப்பு பகுதிகளுக்கு இயக்கப்படும் வாகனங்கள் மணிக்கு 30 மைல் வேகத்தில் தான் இயக்கப்பட வேண்டும் என்ற விதி உள்ளது. அதனை மக்கள் கடைபிடித்து வருகிறார்கள். இதேபோல் எந்த பகுதியில் என்ன வேகத்தில் செல்ல வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு வாகனங்களை இயக்க வேண்டும். இரண்டாவதாக நாம் ஓட்டும் வாகனங்கள் சரியான முறையில் உள்ளதா? பழுதுகள் ஏதேனும் இருக்கிறதா என்பதை பார்க்க வேண்டும். தரமற்ற மற்றும் பழுதான வாகனங்களை இயக்கி விபத்தில் சிக்குபவர்களும் அதிகமாக உள்ளனர். ஓட்டுனர்கள் சரியாக இருக்க வேண்டும் என்பது மூன்றாவது காரணமாக உள்ளது.

ஓட்டுநர் உரிமம் வாங்காமலேயே சிலர் வாகனங்களை இயக்கி வருகிறார்கள். ஓட்டுநர் உரிமம் வாங்கிய சிலர் அதிவேகமாகவும், மது போதையிலும் சென்று தானும் விபத்தில் சிக்கி மற்றவரையும் விபத்தில் சிக்கவைக்கிறார்கள். நம் உடலின் முக்கிய உறுப்பாக உள்ள மூளை பாதிக்காமல் இருப்பதற்காக தான் ஹெல்மெட் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இரு சக்கர வாகனம் ஓட்டும் பலர் ஹெல்மெட் அணியாமல் பயணிக்கிறார்கள். இருசக்கர வாகனத்தின் பின்னால் அமர்ந்திருப்பவர்களும் ஹெல்மெட் அணியாமல் பயணிப்பது ஆபத்து தான்.

ஒரு வாகனத்தில் அதிக பேர் செல்வது மிக மிக ஆபத்து. குடும்ப உறுப்பினர்கள் அதிகமாக இருந்தால் வாடகை கார்களை எடுத்துச் செல்லுங்கள். இந்த வாழ்க்கையைப் பாதுகாக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. நீங்களும், உங்கள் குடும்பமும் மகிழ்ச்சியாக வாழ நிதானத்தை கடைபிடியுங்கள்.

கே.ஜி மருத்துவமனையில் அவசர சிகிச்சைக்காக வரும் நபருக்கு மிக தீவிர சிகிச்சை அளிக்கிறோம். தீவிர சிகிச்சை பிரிவில் 10 மருத்துவர்கள், அவசர சிகிச்சை பிரிவில் 5 மருத்துவர்கள், துணை மருத்துவர்கள் , செவிலியர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் 24 மணி நேரமும் பணியில் உள்ளனர். இவ்வாறு பக்தவத்சலம் கூறினார்.

#### எது நல்ல மருத்துவமனை..?

விபத்தில் சிக்கிய ஒருவர் நல்ல மருத்துவனைக்கு உடனடியாக செல்ல வேண்டும் என்று நினைக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். ஒரு மருத்துவமனையை நல்ல மருத்துவமனை என்று எப்படி தீர்மானிப்பது?

அவசர சிகிச்சை என்று வருபவர்களுக்கு எந்த விதமான பரிசோதனைகள் செய்யவும் தேவையான உபகரணங்கள், மருத்துவர்கள், பொது மருத்துவம், இருதயம், வயிறு, தலை என அனைத்து உறுப்புகளுக்கும் சிகிச்சை அளிக்கும் விதமாக அனைத்து துறைகளும் அந்த மருத்துவமனையில் இருக்க வேண்டும்.

24 மணி நேரமும் ரத்தம் கிடைக்கும் வகையில் ரத்த வங்கி இருக்க வேண்டும். 24 மணி நேரமும் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் பணியில் இருக்க வேண்டும். இதைத் தான் நல்ல மருத்துவமனை என்கிறோம்.



கே.ஜி. மருத்துவமனையின் அவசர சிகிச்சை பிரிவு

## நம்மை காக்கும் 48 திட்டத்தில் - இன்னுயிர் காத்திடுவோம்

- டாக்டர் **ராஜ்குமார்** மூளை நரம்பியல் மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சை நிபுணர்

தலையில் அடிபட்ட ஒருவர் எந்த அளவுக்கு பாதிக்கப் பட்டுள்ளார்? பாதிக்கப்பட்டவர் அரசு காப்பீட்டுத் திட்டம் மூலமாக பயன் பெற முடியுமா என்பது குறித்து கே.ஜி.மருத்துவமனையின் மூளை நரம்பியல் மற்றும் தண்டு வட அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் ராஜ்குமார் கூறியதாவது:

தலையில் அடிபடுதல் என்பதில் 5 நிலைகள் உள்ளன. அதாவது,சாதாரணகாயம், விழுந்ததும் எழுந்து விடுதல், நினைவு இழத்தல், இரத்தம் உறைந்துகசிவு, பலமான அடி ஆகியவையாகும். முதல் நான்கு வகைகளுக்கு மருத்துவச் சிகிச்சைகள் அளிக்க முடியும். உயிர் பிழைக்க வைக்க வாய்ப்புகள் உள்ளன.

லேசான காயம் என்றால் தோல் அளவில் சரி செய்து விடலாம். தலையில் உள்ள எலும்பு உடைந்திருந்தால், அந்த எலும்பை சரியாக வைத்து சிகிச்சை அளிக்க வாய்ப்புகள் உள்ளன. செயற்கை யான எலும்பை வைத்தும் குணப்படுத்தி விடலாம்.

### எப்படிக் கண்டுபிடிப்பது?

தலையில் ஏற்படும் காயம் எவ்வளவு தூரம் மூளையை பாதித்துள்ளது என்பதை எடுத்துக்காட்ட பல்வேறு வகையான கருவிகள் உள்ளன. முன்பு எக்ஸ்ரே மட்டுமே ஒரே வழியாக இருந்தது. தற்போது நவீன முன்னேற்றத்தால் சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ., போன்றவை மிகவும் துல்லியமான சிகிச்சை அளிக்க உதவுகின்றன. எப்படியெனில், மூளையின் சரியான நிலையை அறிய சி.டி.ஸ்கேன் உதவுகிறது. மூளையில் இரத்தக் கசிவை அறிய எம்.ஆர்.ஐ., உதவும்.



தலைகீழாக ஒருவர் விழும்போது, தலையில் மட்டுமின்றி, முதுகுத் தண்டுவடத்திலும் எலும்பு முறிவுகள் ஏற்படும். இதில், உள்ள ஏழு எலும்புகள் மடங்கினால், நரம்புகளும் பாதிக்கப்படும். இரண்டு கை,கால் முடக்கம் ஏற்படலாம். மூச்சு விடுவதும் கடினம். இத்தகைய நிலையில் உள்ளவர் 15 நாள் முதல் 30 நாள் வரை மட்டுமே உயிர் வாழ முடியும். சிகிச்சை தலையில் காயம் அடைந்து சிகிச்சை பெற்றவர்கள் வாரம் ஒரு முறையும் பின்னர் 15 நாட்களுக்கு ஒரு முறையும் பரிசோதனைக்கு வர வேண்டும். அதன் பின்னர் மாதம் ஒரு முறை வந்தால் போதுமானது. ஸ்கேன், எக்ஸ்ரே போன்றவற்றில் பிரச்னைகள் இல்லை என்றால் பரிசோதனைக்கு வரத் தேவையிருக்காது. வலிப்புகள், தழும்புகளைப் பொருத்து மறுபரிசோதனைகள் இருக்கும்.

மருத்துவமனைகளில் மேற் கொள்ளப்படும் முக்கியமான சிகிச்சைகளில் தலைக்காய சிகிச்சையும் ஒன்று. தலையில் அடிபட்ட ஒருவருக்கு சிகிச்சை வழங்க அனுபவமிக்க மருத்துவரும், சிகிச்சைக்கான கருவிகளும், அதி நவீன கருவிகளும் கொண்ட மருத்துவமனை அவசியம். இந்த வசதிகள் அனைத்தும் உள்ள மருத்துவமனையாக கே.ஜி.மருத்துவமனை உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

### மெடிக்ளைம், விபத்து காப்பீடு

விபத்தினால் தலையில் அடிபட்டு வருபவர்களுக்கு கே.ஜி மருத்துவமனையில் மெடிக்ளைம் மற்றும் விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும் மனிதாபிமான அடிப்படையில் குறைவான கட்டணத்தில் சிகிச்சை தருகிறோம். நம்மை காக்கும் 48 திட்டத்தில் நெடுஞ்சாலையில் அடிபட்டு சிகிச்சைக்கு வருவோருக்கு தமிழக அரசு ஒரு லட்ச ரூபாய் தருகிறது.

இதிலும் சிகிச்சை தர நாங்கள் தயார். எல்லோரும் அரசு மருத்துவமனைக்குச் செல்ல முடியும் என்பது இயலாது. நம்மைக் காக்கும் 48 மணி நேரம் என்ற திட்டத்திலும் பயன் பெறலாம். எங்களது மருத்துவமனை, வணிக ரீதியான மருத்துவமனை அல்ல. அறக்கட்டளைச் சார்ந்த மருத்துவமனை. இது, மக்களுக்காகவே சேவையாற்றி வருகிறது, இவ்வாறு மருத்துவர் ராஜ்குமார் கூறினார்

## நரம்பியல் பிரச்சனையில் அவசர சிகிச்சையின் பங்கு

- டாக்டர் ராமகிருஷ்ணன், முதன்மை நரம்பியல் சிகிச்சை நிபுணர்

ஒவ்வொரு மருத்துவமனைக்கும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு முக்கியமானது. ஏனென்றால் விபத்தின் போதும் அவசர காலத்திலும் மக்கள் வருவது அவசர சிகிச்சைப் பிரிவுக்கு தான். நரம்பியல் துறையில் முக்கியமான பிரச்சனை பக்கவாதம் மற்றொன்று வலிப்பு. மேலும், தாங்கமுடியாத தலைவலி, தலை சுற்றல், முதுகுவலி இவை நரம்பியல் துறையில் அவசர சிகிச்சைக்கு மக்கள் வருவதற்கான முக்கியமான காரணமாக உள்ளது.

பக்கவாத சிகிச்சையில் மருத்துவம் முன்னேற்றமடைந்துள்ளது. பல்வேறு சிகிச்சை முறைகள் உள்ளன. இந்த சிகிச்சை முறைகள் 24 மணி நேரமும் நமது மருத்துவமனையில் உள்ளன. மூளையில் ரத்தக் கசிவு என்ற பிரச்சனைக்கு ரத்தக் கசிவு எங்கு உள்ளது என்பது குறித்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக மருத்துவமனைக்கு வருவது நல்லது.

வலிப்பு ஏற்பட்ட 90 சதவீதம் பேருக்கு அடுத்த 90 வினாடிகளில் வலிப்பு நின்றுவிடும். 5 நிமிடத்திற்கு மேல் நிற்கவில்லை என்றால் அதற்கான சிகிச்சைகளை எடுக்க வேண்டும். உடலில் சர்க்கரை அளவு குறைதல், உப்பு சத்து குறைதல், மூளையில் ரத்த ஓட்ட பாதிப்பு உள்ளிட்ட காரணங்களால் வலிப்பு ஏற்படுகிறது.



தீவிரமான தலைவலி உள்ளவர்கள் அவசர சிகிச்சைக்கு வருகிறார்கள். அவர்களுக்கு வலியைக் குறைக்கு ஊசி செலுத்தப்படுகிறது. திடீரென தலைவலியுடன் வருபவர்களுக்கு மூளையில் ரத்தக் கசிவு உள்ளதா என்பதை சோதனை செய்ய வேண்டும். மூளையில் ரத்தக் குழாய் அடைப்பு, மூளைக்காய்ச்சல் உள்ளிட்ட காரணங்களாலும் தலைவலி வரலாம்.

தலை சுற்றல் சாதாரணமாக ஏற்படுவதில்லை. சிறு மூளையில் பாதிப்பு, காதில் பிரச்சனை உள்ளிட்ட காரணங்களால் தலை சுற்றல் ஏற்படும். இதற்கு ரத்த பரிசோதனை செய்து, ஸ்கேன் செய்து பார்க்க வேண்டும். முதற்கட்டமாக ஊசி செலுத்தி அதற்கான மருந்துகள் கொடுக்கப்படும். இதே போல் முதுகுவலி, இடுப்பு வலி உள்ளவர்கள், மயக்கமடைந்தவர்கள், சிறுநீரக பாதிப்பு உள்ளவர்களும் அவசர சிகிச்சைக்கு வருகிறார்கள்.

அவசர சிகிச்சைப்பிரிவில் உள்ள மருத்துவர்களுக்கு அனைத்து துறை குறித்த புரிதல் இருத்தல் அவசியம். மருத்துவர் தவிர செவிலியர்கள், டெக்னீசியன்கள் உள்ளிட்டோரும் அனுபவம் பெற்றவராக இருப்பது அவசியமாகும்.

## மாரடைப்பு, பக்கவாதத்தால் 85% பேர் உயிரிழப்பு

- டாக்டர் சரவணன், இருதய சிகிச்சை நிபுணர்

மாரடைப்பு, இதய செயலிழப்பு, பக்கவாதம் ஆகிய மூன்று நோய்களால் ஆண்டுக்கு 1 கோடியே 80 லட்சம் பேர் உயிரிழக்கின்றனர். இதில் மாரடைப்பு மற்றும் பக்கவாதம் இரண்டு நோய்களால் மட்டும் 85 சதவீதம் பேர் உயிரிழக்கின்றனர்.

இதயத்தில் ரத்த ஓட்டம் நின்றுவிட்டால் அது மாரடைப்பு. மூளையில் ரத்த ஓட்டம் நின்றுவிட்டால் அது பக்கவாதம். 40 வயதுக்கு மேல் உள்ள யாருக்கு வேண்டுமானாலும் மாரடைப்பு ஏற்படலாம்.

மேலும், புகைப்பிடித்தல், புகையிலை மற்றும் மூக்குப்பொடி பயன்படுத்துதல், கட்டுக்குள் இல்லாத சர்க்கரை வியாதி, ரத்த அழுத்தம், அதிக உடல் பருமன், அதிக கொழுப்பு மற்றும் குடும்ப வரலாறு ஆகியவை மாரடைப்பு ஏற்பட உடல் ரீதியான காரணங்களாகும். கவலை, கோபம், தூக்கமின்மை, மனச் சோர்வு ஆகிய உளவியல் ரீதியான காரணங்களாலும் மாரடைப்பு ஏற்படுகிறது.



ஆனால் அனைவருக்கும் நெஞ்சுவலி ஏற்படாது. தாடை முதல் தொப்புள் வரை உள்ள பாகங்களில் ஏற்படும் எந்த ஒரு வலியும் நெஞ்சு வலி ஏற்படக் காரணமாக இருக்கலாம். மூச்சு விடுவதில் சிரமம், அதிகமான வியர்வை, தலை சுற்றல், மயக்கமும் மாரடைப்பின் அறிகுறியாகும். மாரடைப்பு ஏற்பட்டால் உடனடியாக மரணம் ஏற்படும்.

மாரடைப்பு ஏற்பட்டவர்கள் மருத்துவமனைக்கு வரும்போது உடனடியாக இ.சி.ஜி., எஃகோ., ரத்த பரிசோதனை மேற்கொள்ளப்படும். தொடர்ந்து 'லோடிங் டோஸ்' மாத்திரைகள் கொடுக்கப்படும். இதனைத் தொடர்ந்து அடைப்பை கரைக்க ஊசி செலுத்தப்படும்.

பாதிக்கப்பட்டவருக்கு 70 சதவீத அடைப்பு இருந்தால் ஆஞ்சியோ கிராம் செய்து அடைப்புகளை அகற்றுவோம். நேரம் தான் இதயம்.

மாரடைப்பு ஏற்பட்டால் உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும். மாரடைப்பில் முதல் மூன்று மணி நேரம் 'கோல்டன் ஹவர்' எனப்படுகிறது. எனவே எக்காரணம் கொண்டும் காலம் தாழ்த்தக்கூடாது.

## அவசர சிகிச்சைப் பிரிவில் குழு செயல்பாடு முக்கியம்



- டாக்டர் ஸ்ருஜுன் வட்ரானபு, எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்



- டாக்டர் நலந்தா, எலும்பு முறிவு, மூட்டு மாற்று அறுவை சிகிச்சை நிபுணர்

கே.ஜி மருத்துவமனையில் அனைத்து விதமான எலும்பு முறிவுகளுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இன்றைய காலத்திற்கு ஏற்றவாறு இங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு இயங்கி வருகிறது.

சாலை விபத்தில் தலை, நெஞ்சு, வயிறு, மூட்டு ஆகிய உடலின் அனைத்து பகுதிகளிலும் காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, அதற்கான தகுந்த உடனடி சிகிச்சையும் இந்தப் பிரிவில் வழங்கப்படும்.

விபத்தில் அடிப்பட்டவருக்கு முதலில் காற்றுப்பாதை சுவாச சுழற்சி சரியாக உள்ளதா என பரிசோதித்த பின்னர், தலையில் ஏதேனும் காயம் ஏற்பட்டுள்ளதா என்பதையும் பரிசோதிக்க வேண்டும். அடுத்து உடலில் பிற பாகங்களில் காயங்கள் ஏற்பட்டுள்ளதா என்றும், நரம்புகளில் ஏற்பட்டுள்ள காயங்களையும் கண்டுபிடிக்க வேண்டும்.

மேலும் அவசர சிகிச்சை பிரிவு என்று வரும்போது, அங்கு குழு செயல்பாடு மிகவும் முக்கியமானது. கே.ஜி.மருத்துவமனையின் அனுபவம் வாய்ந்த மருத்துவக் குழுவினர் 24 மணிநேரமும் இந்தப் பிரிவில் உள்ளனர். மாரடைப்பு, கீழே விழுந்து அடிபடுதல், முதுகெலும்பு மற்றும் இடுப்பு எலும்பு முறிவு ஆகியவை தீடிரென ஏற்படும் பட்சத்தில், அனைத்து மருத்துவ வசதிகளும் உள்ள மருத்துவமனைக்கு செல்வது அவசியம்.

# கள்ளச்சாராயம் விற்பவர்கள் தேச துரோகிகள்!

✍ **ஆசிரியர்,** தி கோவை மெயில்

சில நாட்களுக்கு முன்பு தமிழகத்தில் நடைபெற்ற கள்ளச்சாராய சாவுகள் அரசையும், மக்களையும் குலுக்கி உள்ளன. கல்வி சிறந்த தமிழ்நாடு என்பது மாறி கள்ளச்சாராயம் விற்கப்படும் தமிழ்நாடு என்ற அவப்பெயர் வந்துசேர்ந்திருக்கிறது. எவ்வளவுதூரம் சமூகநீதி, சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு, தொழில் என்று வளர்ந்திருக்கிறோமோ அதேபோல இந்த கள்ளச்சாராயம், கஞ்சா போன்றவையும் சமுதாயத்தில் புரையோடிப்போய் இருக்கிறது என்பதை இந்த சம்பவங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இந்த கள்ளச்சாராய சம்பவங்களைத் தொடர்ந்து தமிழகம் முதல்வர் ஸ்டாலின் நேரடியாக சென்று பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியிருப்பதோடு ரூ.10 லட்சம் நிவாரணத்தொகை அறிவித்திருக்கிறார். என்றாலும் இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் தடுக்க வேண்டியது அரசின் உடனடி கடமை ஆகும்.

சில குடும்பங்கள் தங்களது குடும்பத் தலைவனை இழந்திருப்பது அவர்களுக்கு பேரிடி. கள்ளச்சாராய வியாபாரி மீது வழக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் என்று நடந்த சம்பவத்துக்குத் தீர்வு காண்பது ஒரு வகை. அடுத்து, அந்த ஆதரவற்ற குடும்பம் என்ன செய்யும் என்பதை உணர்ந்து சமூக நலத் துறை, அரசு சாராத் தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட சமூக நல அமைப்புகள் மூலம் மறுவாழ்வு நடவடிக்கை எடுக்க வேண்டியதும் அவசியம்.

காவல்துறையின் செயல்பாடுகள் சீரமைக்கப்பட வேண்டும். இந்த வகையான கள்ளச்சாராயம் விற்பதும், சிலர் குடிப்பதும் ஒரு நாளில் நிகழ்வது அல்ல. பல நாட்களாகத் தொடரும் ஒரு தொழில். அந்தப் பகுதிகளில் உள்ள மதுவிலக்குப் பிரிவு காவல்துறை பணியாளர்களின் இயலாமையைத்தான் இது காட்டுகிறது. சில அதிகாரிகளை இடைநீக்கம் செய்வதோ, வழக்குப் போடுவதோ இதற்கு தீர்வாகாது. உண்மையான கள நிலவரத்தை அறிந்து சமூக அக்கறையுடன் காவல்துறை அதிகாரிகள் இதுபோன்ற குறிப்பிட்ட பகுதிகளில் பணியமர்த்தப்பட வேண்டும். இதுபோன்ற இடங்களில் அதிகாரிகள் தொடங்கி, கீழ்மட்ட காவலர் வரை குறைந்தபட்ச சமூக அக்கறையோடு அணுகுவது அவசியம் ஆகும்.

அடுத்து, இந்த கள்ளச்சார வியாபாரிகள். இவர்கள் எங்கோ வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் அல்ல. பெரும்பாலும் இது சமூகத்திற்கு எதிரான குற்றம் என்று தெரிந்தும் இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்கள். இவர்கள் மீது அந்தந்த வழக்கு என்று நடவடிக்கை எடுக்காமல் தொடர்ந்து கண்காணிப்பின்கீழ் கொண்டு வந்து மடைமாற்றம் செய்யப்பட வேண்டியது அவசியம். அவர்கள் பொது சமூகத்தின் பார்வையில் வேறு தொழில்களுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.



**"தமிழகம் முழுவதும் இதுபோல கள்ளசாராயம் தொடர்பான இடங்கள், மனிதர்கள் பட்டியல் எடுக்கப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட வேண்டும். இது செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் நடைபெறுகிறது என்று அர்த்தமல்ல. இதைத் தாண்டி தஞ்சை, சேலம், கோபி என்று பல மாவட்டங்களிலும் கள்ளச்சாராயம் கண்டுபிடிக்கப்பட்டு காவல்துறை நடவடிக்கை எடுப்பதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. அப்படிப் பார்த்தால் தமிழகத்தில் பரவியுள்ள ஒரு நோயாகத்தான் இது தெரிகிறது. இது உடனடியாக களையப்பட்டு பல அப்பாவி, ஏழை குடும்பங்கள் காக்கப்பட வேண்டும்.**

தமிழகம் முழுவதும் இதுபோல கள்ளசாராயம் தொடர்பான இடங்கள், மனிதர்கள் பட்டியல் எடுக்கப்பட்டு அவர்களின் நடவடிக்கைகள் கவனிக்கப்பட வேண்டும். இது செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் நடைபெறுகிறது என்று அர்த்தமல்ல. இதைத் தாண்டி தஞ்சை, சேலம், கோபி என்று பல மாவட்டங்களிலும் கள்ளச்சாராயம் கண்டுபிடிக்கப்பட்டு காவல்துறை நடவடிக்கை எடுப்பதாக செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. அப்படிப் பார்த்தால் தமிழகத்தில் பரவியுள்ள ஒரு நோயாகத்தான் இது தெரிகிறது. இது உடனடியாக களையப்பட்டு பல அப்பாவி, ஏழை குடும்பங்கள் காக்கப்பட வேண்டும்.

பொதுவாக, குடிப்பதே தவறு என்ற நிலை மாறி, கள்ளச்சாராயத்தை தவிர்ப்பதற்காக அரசே மதுக்கடைகளை நடத்தி வருகிறது. அங்கு விலை அதிகம் என்பதாலும் இந்தத் திரைமறைவு சாராயம் மலிவாகக் கிடைக்கிறது என்பதாலும், ஆங்காங்கே இதுபோல கள்ளச்சாராய வணிகம் நடைபெறுவதாக சிலர் கூறுகிறார்கள். எது எப்படி இருப்பினும், போதையின் பாதையே தவறு. ஆனால், அது சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட பின்னர் குறைந்தபட்சம் உயிருக்கு ஆபத்து இல்லாமல் இருக்க வேண்டும்.

இதுபோக இந்த கள்ளச்சாராய வியாபாரிகள் ஒரு தொழில் முறை வணிகர்கள் அல்ல. தற்போதைய சம்பவத்தில் மெத்தனால் என்கின்ற மெத்தில் ஆல்கஹால் இதில் கலந்திருப்பதால்தான் மரணம் என்று கூறுகிறார்கள். அந்த வியாபாரிகளுக்கு இந்த மெத்தனால் எங்கிருந்து கிடைத்தது என்ற கோணத்திலும் விசாரணை நடத்த வேண்டியது அவசியம்.

தற்போது உள்ள தமிழக அரசின் முதல்வர், சுகாதாரத் துறை அமைச்சர், காவல்துறை டிஜிபி உள்ளிட்ட அனைவரும் தங்களது உடல் நலம் குறித்த நல்ல அக்கறையும் விழிப்புணர்வும் கொண்டவர்கள். மக்கள் நலனில் அக்கறை உள்ளவர்கள்.

நல்ல உடல்நலம் படைத்த மனிதர்கள்தான் ஒரு நாட்டின் முதல் சொத்து. அந்த வகையில் மனித உயிர்களின் நலம் காக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அரசும் காவல்துறையும் போர்க்கால அடிப்படையில் விரைந்து செயல்பட வேண்டும்.

## பள்ளி மாணவர்களுக்கு கோடைகால பயிற்சி முகாம்

✍ தி கோவை மெயில்

கோயம்புத்தூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் பள்ளிக் கல்வித் துறை இணைந்து ஆர்.எஸ்.புரம் அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளியில் 8 மற்றும் 9 ஆம் வகுப்பு பள்ளி மாணவர்களுக்கான கோடை கால சிற்பக்கலை சிறப்பு பயிற்சி முகாமினை ஏற்பாடு செய்துள்ளது. முகாமை மாவட்ட ஆட்சியர் கிரந்திகுமார் துவக்கி வைத்தார்.

## வெற்றி, தோல்வியைத் தாண்டி உழைக்க வேண்டும்

✍ தி கோவை மெயில்

கோவை ஈச்சனாரி பகுதியில் உள்ள தனியார் மண்டபத்தில் பா.ஜ.க மாநில செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. இதில் பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை உட்பட பா.ஜ.க மேலிட நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

மாநிலத் தலைவர் அண்ணாமலை பேசுகையில், தமிழ் மக்கள் மீது அதிகளவில் அன்பு வைத்து உள்ள நமது பிரதமர் ஜனநாயகத்தின் தலைவராக இருக்கிறார். 10வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் அவரை இன்னும் 5 ஆண்டு காலம் பிரதமராக ஆக்க வேண்டும். அதற்கு நாம் தேனீக்களைப்போல் சுறுசுறுப்பாக பணி செய்ய வேண்டும். குடிமக்களைப் பாதுகாப்பது மன்னனின் முதல் பணி. அதைத்தான் பிரதமர் செய்து வருகிறார். உள்நாட்டு, அண்டை நாட்டு அச்சுறுத்தல் அனைத்தையும் பிரதமர் எதிர்கொண்டு வருகிறார்.

ஜம்மு காஷ்மீர்க்கு ஒரு கோடி பேர் சுற்றுலா பயணம் செய்து உள்ளனர். நக்சல் பிரச்னை முழுமையாக ஒழிக்கப்பட்டு உள்ளது. பி.ஃஎப்.ஐ போன்ற பயங்கரமான இயக்கங்கள் தடை செய்யப்பட்டு தைரியமான நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

கோவையில் சிலிண்டர் வெடிகுண்டு கலச்சாரம், துப்பாக்கி கலாச்சாரம் தலைதூக்கி உள்ளது. மூன்றாவது பொருளாதார நாடாக நாம் மாறப் போகிறோம். அதற்கான அடிப்படைப் பணிகளை பிரதமர் மேற்கொண்டு வருகிறார். 350 ஆண்டுகளுக்குப் பிறகு பொருளாதாரத்தில் முன்னேறும் நாடாக நாம் இருக்கிறோம். இந்தியாவின் பொருளாதாரம் உயர உயர தமிழ்நாட்டின் பொருளாதாரம் குறைகிறது. திராவிட அரசின் 30 சதவிகித கமிஷன்தான் தமிழ்நாடு பின்னோக்கி செல்வதற்கு காரணம். மே 30 முதல் ஜூன் 30 ம் தேதி வரை பிரதமரின் நலத் திட்டங்களை பெரிய இயக்கமாக மக்களிடம் எடுத்துச் செல்ல உள்ளோம். பா.ஜ.க ஆட்சிக்கு வந்தபோது இந்தியாவில் 18,000 கிராமங்களில் மின்சாரம் இல்லை. தற்போது மின்சாரம் இல்லாத கிராமமே கிடையாது.

பிரதமர் மோடி புதுமை பெண்களை உருவாக்கி வருகிறார். சுத்தம், சுகாதாரம், வீடு அனைத்தும் பிரதமரின் ஆட்சியில்தான் உயர்ந்து உள்ளது. பா.ஜ.க ஆட்சியில் ஒவ்வொரு மனிதரும் மாறி உள்ளனர்.



## தங்கம் வென்ற கே.பி.ஆர். கல்லூரி

**இந்திய பளுதூக்கும் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் திருச்சியில் தேசிய அளவிலான பளு தூக்கும் *(Power Lifting)* போட்டி பல்வேறு பிரிவுகளில் நடைபெற்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். இப்போட்டியில் கே.பி.ஆர். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி உடற்கல்வித் துறையின் பயிற்சியாளரான ஆனந்தகுமார் சீனியர் பிரிவில் 66 கிலோ பளுதூக்கும் போட்டியில் தங்கம் வென்றார். அவரை கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி முதல்வர் அகிலா மற்றும் பேராசிரியர்கள் பாராட்டினர்.**

## 21ம் தேதி டாட்சன்ஸ் மியூசிக் பேரடைஸின் இசைக் கச்சேரி




✍ தி கோவை மெயில்

கோவையைச் சேர்ந்த இசைக்கலைஞர் ஐசக் நெல்சனின் டாட்சன்ஸ் மியூசிக் பேரடைஸின் இசைக் கச்சேரி வருகின்ற 21ம் தேதி ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள "கோஇந்தியா" கலையரங்கில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து கோவை பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய ஐசக் நெல்சன், கடந்த மே ஒன்றாம் தேதி கண்களைக் கட்டிக்கொண்டு 30 இசைக் கருவிகளை இரண்டு மணி நேரத்திற்குள் வாசித்து உலக சாதனை படைத்துள்ளதாகவும், இதனை வருகின்ற ஜூன் மாதம் கலாம் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் கௌரவிக்க உள்ளதாக தெரிவித்தார். இண்டர்நேஷனல் புக்ஸ் ஆஃப் ரெக்கார்ட்ஸ் குழுமம் அங்கீகரித்துள்ளதாக தெரிவித்தார்.

மேலும், கோவையில் வருகின்ற மே 21ஆம் தேதி ஆவாரம்பாளையம் பகுதியில் உள்ள கோஇந்தியா கலையரங்கில் தனது டாட்சன்ஸ் மியூசிக் பேரடைஸின் இசைக் கச்சேரி நடைபெற உள்ளதாக கூறினார். இக்கச்சேரிக்கு 400 ரூபாய் நுழைவுக் கட்டணம்.

## பொதுத்தேர்வில் சாதனை படைத்த ஸ்ரீ ராமகிருஷ்ணா மெட்ரிக். பள்ளி மாணவிகள்



**முதல் 3 மதிப்பெண்கள் பெற்ற மாணவிகள், கணினி ஆசிரியர் தினேஷ் ஆகியோரை எஸ்.என்.ஆர். அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமிநாராயணஸ்வாமி பாராட்டினார். உடன், தலைமை நிர்வாக அதிகாரி ராம்குமார், பள்ளி முதல்வர் சாரதா.**

✍ தி கோவை மெயில்

ஸ்ரீராமகிருஷ்ணா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி மாணவி திவ்யா, 12ம் வகுப்பு பொதுத் தேர்வில் 596 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றதுடன், நான்கு பாடப் பிரிவில் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் பெற்று சாதனைப் படைத்துள்ளார்.

முஸ்பிரா 592 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடமும்; ஜனனி, ரூபினி, வெண்ணிலா ஏஞ்சல் ஆகியோர் 584 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடமும் பெற்று சிறப்பு சேர்த்தனர். மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள்மற்றும் கணினி பயன்பாடுகள் பாடத்தில் 18 மாணவர்களை 100 மதிப்பெண்கள் பெற செய்த பள்ளியின் கணினி ஆசிரியர் தினேஷ் ஆகியோரை எஸ்.என். ஆர். அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் லட்சுமி நாராயணஸ்வாமி இனிப்புகள் வழங்கி, பொன்னாடை அணிவித்து கௌரவித்தார். தலைமை நிர்வாக அதிகாரி ராம்குமார், முதல்வர் சாரதா ஆகியோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

## சச்சிதானந்த பள்ளி மாணவர்கள் தேர்வில் நூற்றுக்கு நூறு வெற்றி!

✍ தி கோவை மெயில்

கோவை, மேட்டுப்பாளையம் சச்சிதானந்த ஜோதி நிகேதன் பன்னாட்டுப் பள்ளி 12ம் வகுப்பு சி.பி.எஸ்.இ. தேர்வில் நூறு சதவீதம் வெற்றி பெற்றுள்ளது.

மேலாண்மைப் பிரிவில் மாணவியர் ரித்திகாஸ்ரீ, சுடர்க்கொடிவேல் பள்ளி அளவில் 500 க்கு 476 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பிடித்தனர். ஸ்ரீநித்தின் 473 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடமும்; ஜெய்காருனேஸ், அஸ்வந்த்ராஜன் 471 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடமும் பெற்றனர்.

அறிவியல் பிரிவில் நித்தின் சூர்யா 465 மதிப்பெண்களுடன் முதலிடமும், ஷிவானி 462 மதிப்பெண்களுடன் இரண்டாம் இடமும், அநிரிதா 457 மதிப்பெண்களுடன் மூன்றாம் இடமும் பெற்றனர். தேர்வு எழுதிய 82 மாணவ, மாணவியரும் 60 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெற்றனர். அவர்களில் 13 மாணவ, மாணவியர் 90 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் பெற்றனர்.

வெற்றி பெற்றவர்களைப் பள்ளி நிர்வாக அறங்காவலர் ராமசாமி, செயலர் சிந்தனைக் கவிஞர் கவிதாசன், கல்வி ஆலோசகர் கணேசன், முதல்வர் உமாமகேஸ்வரி, துணை முதல்வர் சக்திவேல் மற்றும் பெற்றோர்கள், ஆசிரியர்கள் வாழ்த்தினர்.

## குமரகுரு கல்லூரியில் விண்வெளி துறைக் கருத்தரங்கு

✍ தி கோவை மெயில்

குமரகுரு கல்வி நிறுவனமானது, கோவையில் உள்ள சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், பாதுகாப்புத் துறை சார்ந்த தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கான முயற்சிகளை ஆதரித்து வந்தது.

அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடத்தில், பாதுகாப்புத்துறை மற்றும் வான்வெளி தொழில் சார்ந்த, உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக இக்கருத்தரங்கம் நடந்தது.

இந்திய ராணுவத் துறையின் தளவாடங்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் கூட்டமைப்பு *(SIDM)*, இந்தியத் தொழில் கூட்டமைப்பு *(CII)*, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் *(TIIC)* மற்றும் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் *(TIDCO)* இணைந்து குமரகுரு கல்வி நிறுவனங்களில் கருத்தரங்கம் நடந்தது.

இதன் அடிப்படை நோக்கம், தமிழகத்தின் மேற்கு மாவட்டம், குறிப்பாக கோவையைச் சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள், பாதுகாப்புத் துறைசார்ந்த நிறுவனங்களில் தளவாடங்களை உற்பத்தி செய்யும் பல்வேறு வாய்ப்புகளை அறிந்துகொண்டு, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இராணுவத் தளவாடங்களின் உற்பத்தியைத் துவங்க வேண்டும் என்பதற்காகவும். அது மட்டுமல்லாது, இந்நிறுவனங்கள், ராணுவத் துறைகளை மற்றும் வான்வழித்துறை சார்ந்த தளவாடங்களின் உற்பத்தி செய்யும் பெரும் நிறுவனங்களைப் பற்றி தெரிந்து கொள்ள ஒரு அரிய வாய்ப்பாக அமைந்துள்ளது. இம்முயற்சியின் பயனாக, தமிழ்நாடு பாதுகாப்பு தொழில்துறை வழித்தடமானது, ராணுவத் தளவாடங்களை உற்பத்தி செய்வதில் இந்தியாவுக்கே முன்மாதிரியாக திகழ வாய்ப்பாக அமையும்.






**கருத்தரங்கத்தில் உரையாற்றுகிறார் மாவட்ட ஆட்சியர் கிரந்தி குமார்.**

இக்கருத்தரங்கில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம் சிறப்புசெயலர் மற்றும் திட்ட இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஹன்ஸ்ராஜ் வர்மா, எஸ்.ஐ.டி.எம்ன் தமிழ்நாடு கிளை தலைவர் ராஜேஷ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

150 தொழில் நிறுவனங்கள் மற்றும் ஏழு கல்லூரிகளில் இருந்து பலரும் பங்கேற்றனர்.

## ப்ரோசோன் மாலில் மெகா உணவு திருவிழா

✍ தி கோவை மெயில்


ப்ரோசோன் மாலில் மெகா உணவு திருவிழா தொடங்கியது. மூன்று நாட்கள் நடைபெறும் இந்நிகழ்வின் துவக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த உணவுத் திருவிழாவில் தென்னிந்திய, வட இந்திய, சைனீஸ், சைவ மற்றும் அசைவ உணவு வகைகளுக்காக 50க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த உணவு திருவிழாவை முன்னிட்டு, சம்மர் ஹோலிக் 2003 கிராண்ட் பைனல் எனும் பெயரில் பாட்டுப் போட்டி, நடன போட்டி, மற்றும் பேஷன் ஷோ ஆகியவற்றிக்கான இறுதி போட்டிகள் இந்த மூன்று நாட்கள் நடைபெறுகிறது.







# ஈஷாவில் ஏன் பாம்பு மோதிரம்?



✍ தி கோவை மெயில்

மக்களின் ஆன்மீக நலனுக்காக ஈஷாவில் வழங்கப்படும் கருவிகளில், பாம்பு மோதிரம் ஒரு முக்கியப்பங்கு வகிக்கிறது. இந்த மோதிரம் எதற்காக, அதை அணிந்தால் என்ன பயன் என்பதைத் தெளிவுபடுத்துகிறது இந்தக் கட்டுரை.

**சத்குரு:** "ஒவ்வொரு மனிதருக்கும் அவர் வாழ்க்கை என்று எதை அறிந்திருக்கிறாரோ அதன் உச்சத்தை அடைய வேண்டும் என்ற ஆவல் இயல்பாகவே இருக்கிறது. உலகின் கிழக்குப்பகுதி நாடுகள் சிலவற்றில் இந்த மனித விருப்பத்தை சீறி எழும் பாம்பாக சித்தரித்திருக்கிறார்கள். சிவபெருமானின் தலையில் பாம்பு படமெடுத்து காட்சியளிப்பது அவர் விழிப்புணர்வின் உச்ச நிலையை அடைந்ததையே சித்தரிக்கிறது.

மோதிர விரல், பல உணர்ச்சிமிக்க நாடிகள் அல்லது சக்தி வழிகளின் இருப்பிடமாக இருக்கிறது. அந்த நாடிகளை அல்லது சக்தி வழிகளைத் தகுந்த தீட்சை மற்றும் பயிற்சிகள் மூலம் தீவிரமாகத் தூண்டிவிட முடியும். தன் மோதிர விரலின்மீது ஆளுமை உள்ள ஒருவர், வேறொருவரின் விதியையே மாற்றி எழுத முடியும் என்பது ஒரு விஞ்ஞான உண்மையாக இருக்கிறது.

மோதிர விரலின் அடிப்பாகத்திலிருந்து நுனி வரை பல பிறவிகளின் அனுபவங்கள் பதிந்துள்ளன. அதை அறிவதற்கு அநேக ஆன்மீக சாதனைகள் தேவைப்படுகிறது. அந்த விரலின் வெவ்வேறு இடங்களைத் தொடும்போது, வெவ்வேறு அனுபவங்களை உணர முடியும்.

அந்த விரலின் ஒவ்வொரு மைக்ரோ மில்லிமீட்டரும் ஒவ்வொரு விதத்தில் வித்யாசமானது. மோதிர விரல் உங்கள் கணினி மௌசைப் போன்றது. அதை வைத்து எதுவும் செய்ய முடியும். அதனால்தான் தன் மோதிர விரல்மீது ஆளுமை உள்ள ஒருவர் அவருடைய விதியையும் திருத்தி எழுத முடியும் என்று நாம் சொல்கிறோம்."

**பாம்பு மோதிரத்தின் பயன்கள்:**

ஒரு சாதகர் தன் மோதிர விரலில் செம்பு மோதிரத்தை அணியும்போது அது அவரது உடலை ஒருநிலைப்படுத்துகிறது. அவருடைய ஆத்ம சாதனைகளுக்கு உதவியாக இருக்கிறது. சரியான ஆன்மீகப் பயிற்சிகளுடன் பாம்பு மோதிரம் அணிவது ஒருவரின் இறைநிலைப் பரிமாணங்களுக்கான திறவுகோலாகவும் இருக்கிறது.

**யாரெல்லாம் அணியலாம்?**

இந்த செம்பு மோதிரத்தை குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை யார் வேண்டுமானாலும் அணிந்துகொள்ளலாம். இதை அணிவதற்கு எந்த வயதும், பாலினமும் ஒரு தடையில்லை, எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லை. இதை உங்கள் இடது கை மோதிர விரலில் அணிவது சிறந்தது.

## இலவச கண் சிகிச்சை முகாம்

✍ தி கோவை மெயில்

கோவை மாநகராட்சி வடக்கு மண்டல அலுவலகத்தில் மாநகராட்சி மற்றும் சங்கரா கண் மருத்துவமனை இணைந்து வெளிச்சம் திட்டத்தின்கீழ் கட்டணமில்லா சிறப்பு கண் சிகிச்சை மருத்துவ முகாமை மாநகராட்சி ஆணையாளர் பிரதாப் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். உடன், துணை மேயர் வெற்றிசெல்வன், சங்கரா மருத்துவமனை நிர்வாகி மற்றும் மேலாண்மை இயக்குநர் ரமணி, வடக்கு மண்டலத் தலைவர் கதிர்வேல், பொது சுகாதாரக் குழுத் தலைவர் மாரிச்செல்வன், மாமன்ற உறுப்பினர்கள், உதவி ஆணையர் மோகனசுந்தரி, மண்டல சுகாதார அலுவலர் ராதாகிருஷ்ணன் மற்றும் சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர்.

# கே.ஜி. மருத்துவமனையின் புதிய துவக்கம் 'மரபியல் துறை'

✍ தி கோவை மெயில்

கோயம்புத்தூர் கே.ஜி. மருத்துவமனை மற்றும் எம்ஃபைன் டைக்நோஸ்டிக்ஸ் *(mfine diagnostics)* நிறுவனத்துடன் இணைந்து கணபதி மாநகரில் உள்ள கே.ஜி. சிறப்பு மருத்துவ மையத்தில் மரபியல் துறை *(Genetic Clinic)* அண்மையில் துவக்கப்பட்டது.

துவக்க உரையாற்றிய கே.ஜி. மருத்துவமனைத் தலைவர் டாக்டர் பக்தவத்சலம் கூறியதாவது, 'கே.ஜி. மருத்துவமனை 50 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. நாங்கள் எப்போதும் புதுப்புதுத் துறைகளை ஆரம்பிப்பதில் முன்னணியில் நிற்கிறோம். சிடி ஸ்கேன் முதிலில் ஆரம்பித்தது நாங்கள்தான், 128 ஸ்லைஸ் ஸ்கேன், ட்ரெட்மில், என்டோஸ்கோப்பி எனப் பல மருத்துவப் புரட்சிகளை முதலில் ஆரம்பித்தது கே.ஜி. மருத்துவமனைதான். தற்போதும் நாங்கள் ஒரு புதிய மருத்துவப் புரட்சியாக மரபியல் துறையை *(genetics department)* எங்கள் மருத்துவமனையில் ஆரம்பிக்கிறோம். இதனை புனே மருத்துவ நிபுணர்களுடன் இணைந்து துவக்குகிறோம்.

மரபுவழி மருத்துவம் என்பது பெற்றோர்களுக்கு இருக்கும் நோயினால் பிறக்கும் குழந்தைகள் பாதிக்கப்படுவார்கள். இந்த மரபுவழிக் குறைப்பாடு காரணமாக குறைப்பிரசவம் ஏற்பட்டு கருச்சிதைவு, குழந்தைகளுக்கு வலிப்பு போன்றவை உண்டாகும். இதனைத் தவிர்த்திட இத்துறை மூலம் சிகிச்சைகள் செய்யப்படும். குழந்தைகளுக்கு ஏற்படும் கண்டிபிடிக்கவே முடியாத நோய்களுக்கு இந்த மரபுவழி மருத்துவம் மூலம் நல்ல சிகிச்சையும் தீர்வும் காணமுடியும்' என்றார்.

எம்ஃபைன் டைக்நோஸ்டிக்ஸ் நிறுவனத்தின் மரபுவழி மருத்துவ நிபுணர் டாக்டர் மனிஷா டோஃபோடி பேசுகையில், 'இங்கிலாந்தில் படித்து முடித்த எனக்கு இந்தத் துறையில் 18 வருட அனுபவம் உள்ளது. இந்தியாவில் மிகக் குறைவான அளவில்தான் இந்தத் துறை செயல்பட்டுவருகிறது. ஆனால் தற்போதைய காலகட்டத்தில் இந்தத் துறையின் தேவை பொதுமக்களுக்கு அவசியமாகவுள்ளது. எனது அனுபவத்தின் மூலம் இங்கு வருபவர்களுக்கு மரபுவழி நோய் குறித்த ஆலோசனைகள், அடிக்கடி ஏற்படும் கருச்சிதைவு, ஆட்டிசம் குறைபாடு, மலட்டுத்தன்மை, குறைப்பாடுள்ள குழந்தைகள், ஹீமோகுளோபின் குறைப்பாடு, கிட்னி செயல்பாடு குறைவு, நரம்பியல் குறைப்பாடு போன்ற பரம்பரை நோய்களுக்கு சிகிச்சை அளிக்கவுள்ளோம்' என்றார்.

மருத்துவமனையின் நரம்பியல் துறைத் தலைவர் டாக்டர் ராமகிருஷ்ணன் வாழ்த்துரையாற்றினார். எம்ஃபைன் டைக்நோஸ்டிக்ஸ் நிறுவனத்தின் பொது மேலாளர் (தெற்கு) ஜிஷ்ணு பிஷாரோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



கே.ஜி. சிறப்பு மருத்துவ மையத்தில் மரபியல் துறையை துவக்கி வைத்தார் கே.ஜி. மருத்துவமனையின் தலைவர் டாக்டர் பக்தவத்சலம். அருகில் எம்ஃபைன் டைக்நோஸ்டிக்ஸின் மருத்துவர்கள்.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் செவிலியர் தின விழா

✍ தி கோவை மெயில்

**ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் நடைபெற்ற செவிலியர் தின விழாவை ஆர்.வி.எஸ். நிறுவனங்களின் செயலாளர் சாரம்மா சாமுவேல் துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். எஸ்.என்.ஆர். சன்ஸ் அறக்கட்டளை இணை நிர்வாக அறங்காவலர் சுந்தர் தலைமையுரை ஆற்றினார். நோயாளிகளின் பராமரிப்பிலும், சுகாதாரத்தில் சிறப்பாக செயல்பட்ட செவிலியர்களுக்கும் இணை நிர்வாக அறங்காவலர் சுந்தர் சான்றிதழ்களும், பரிசுகளையும் வழங்கினார்.**



## கே.பி.ஆர். கல்லூரியில் வேலைவாய்ப்பு முகாம்

✍ தி கோவை மெயில்

தமிழக அரசின் "நான் முதல்வன்" திட்டம் மற்றும் தமிழ்நாடுத் திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து கல்லூரி மாணவர்களுக்கான வேலைவாய்ப்பு முகாமை அண்மையில் கே.பி.ஆர். பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடத்தியது.

ஐ.டி., உற்பத்தி, கட்டுமானம் மற்றும் முக்கியப் பொறியியல் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த 22 தனியார் நிறுவனங்கள் பங்கேற்றன. அப்பகுதியைச் சார்ந்த பத்துக்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகளில் இருந்து சுமார் 300க்கும் மேற்பட்ட மாணவர்கள், ஒரே இடத்தில் ஒரே நேரத்தில் பல்வேறு நிறுவனங்களின் நேர்காணலில் வேலைவாய்ப்பை பெறுவதற்கு இந்நிகழ்வு உதவியாக இருந்தது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது.

## ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனையில் சிறப்பு மருத்துவ முகாம்



கோவை மாநகராட்சி மத்திய மண்டலம், ஸ்ரீ ராமகிருஷ்ணா மருத்துவமனை இணைந்து நடத்திய கட்டணமில்லா சிறப்பு மருத்துவ முகாமை ஆணையாளர் பிரதாப் குத்துவிளக்கேற்றித் தொடங்கி வைத்தார். உடன், துணை மேயர் வெற்றிச்செல்வன், மருத்துவமனை நிர்வாக அறங்காவலர் லட்ஷுமி நாராயணஸ்வாமி, பொது சுகாதாரக் குழுத் தலைவர் மாரிச்செல்வன், மாமன்ற உறுப்பினர் பிரபா ரவீந்திரன், உதவி ஆணையர் மகேஷ் கனகராஜ், மண்டல சுகாதார அலுவலர் குணசேகரன், சுகாதார ஆய்வாளர்கள் ஆகியோர்.

## சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி

**கோவையில் உள்ள எஸ்.என்.எஸ். தொழில்நுட்பக் கல்லூரியின் இளைஞர் செஞ்சிலுவை சங்க மாணவர்கள் மற்றும் இ.சி.இ. மாணவர்கள் இணைந்து சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை கோவில்பாளையத்தில் நடத்தினர். முதல்வர் செந்தூர்பாண்டியன், துணை முதல்வர்கள் தமிழ்ச்செல்வம், விவேகானந்தன் மற்றும் இளைஞர் செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் செல்லப்பாண்டிஆகியோர் துவக்கிவைத்தனர்.சுமார் 200 மாணவர்கள், ஆசிரியர்கள் பொதுமக்களுக்கும், வாகன ஓட்டிகளுக்கும் சாலை பாதுகாப்பு குறித்த துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். கோவில்பாளையம் காவல் நிலையம் பாதுகாப்பு வழங்கினர்.**



## ஜி.கே.என்.எம். மருத்துவமனையில் சர்வதேச செவிலியர் தினம் அனுசரிப்பு




(இடமிருந்து) துணை செவிலியர் அதிகாரி லட்சுமி, நுரையீரல் மருத்துவர் டாக்டர் சுந்தர குமார், தலைமை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசுவாமி, தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் மனோகரன், தலைமை ஆய்வக மருத்துவர் டாக்டர் ராதா ஆகியோர்.

✍ தி கோவை மெயில்

ஜி.குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் (ஜி.கே.என்.எம்) சர்வதேச செவிலியர் தினம் அனுசரிக்கப்பட்டது.

மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் ரகுபதி வேலுசாமி, 25 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய செவிலியர்களை கௌரபடுத்தி விருதுகள் வழங்கினார். செவிலியர்கள், தங்களின் இதரத் திறமைகளை வெளிப்படுத்தும் வண்ணம், பேப்பர் ப்ரசன்ட்டேஷன், கவிதை எழுதுதல் போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற செவிலியர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

ஜி.கே.என்.எம் மருத்துவமனையில் சுமார் 1,400 செவிலியர்கள் பணியாற்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இரத்தினம் கலைக் கல்லூரியில் பட்டமளிப்பு விழா

✍ தி கோவை மெயில்

இரத்தினம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் 19 வது பட்டமளிப்பு விழாவில் பெங்களூரு, விநாயகம் டேலண்ட் அக்யூசிஷன் ஜென்பேக்டின் துணைத் தலைவர் கருணாகரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

அவர் பேசுகையில், 'கற்றல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை. மாணவர்களை பொறுப்புள்ள குடிமக்களாக வடிவமைக்க ஆசிரியர்களின் கடின உழைப்பும், அர்ப்பணிப்பும் தேவை. இக்கல்லூரி கல்வியில் உயர் தரத்தை பராமரித்து, இளம் பட்டதாரிகளை சமூகத்தின் உறுப்பினர்களாக மாற்ற உதவுகிறது. தகவல் தொழில்நுட்பத் துறைகளில் போட்டியிட மாணவர்கள் தங்கள் தனிப்பட்ட அறிவை மேம்படுத்த வேண்டும்' என்றார்.

பல்வேறு இளங்கலை, முதுகலைத் துறைகளைச் சேர்ந்த 1,300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்பட்டது. கல்லூரி முதன்மை நிர்வாக அதிகாரியும், செயலாளருமான மாணிக்கம், முதல்வர் பாலசுப்பிரமணியன் மற்றும் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

# KPRIET-NSS and ALERT-NGO Partners to Empower Students

✍ The Covai Mail

KPR Institute of Engineering and Technology's National Service Scheme (KPRIET-NSS) and ALERT-NGO Coimbatore recently joined forces and organized a highly successful "Basic First-Aid Training Workshop". This collaborative effort aimed to prioritize safety and well-being while equipping students and faculty with essential life-saving skills.

Partnering with ALERT-NGO Coimbatore, renowned for its expertise in first-aid training, KPRIET-NSS ensured that participants received comprehensive instruction on various critical topics. The workshop covered Cardiopulmonary Resuscitation (CPR), management of choking incidents, wound care, fracture stabilization, and other essential first-aid procedures. Expert trainers provided valuable guidance, creating a supportive environment for hands-on learning.

The Basic First-Aid Training Workshop exemplified KPRIET-NSS and ALERT-NGO's dedication to creating a safer and more prepared environment within the institution. This collaborative effort serves as an inspiration for other educational institutions, emphasizing the significance of proactive safety measures and fostering a culture of preparedness.

# Adharvaa Suzuki Unveils Premium Suzuki Showroom in Coimbatore

✍ The Covai Mail

Adharvaa Suzuki, the authorized dealership of Suzuki Motorcycle India Private Limited, inaugurated its new Suzuki Premium Motorcycles and Scooters Showroom today at Avinasi Road, Coimbatore. The inauguration ceremony was graced by Hari Krishna, AVP - After Sales, and Mitsumoto Watabe, Senior Manager, Sales & Marketing advisor from Japan. The showroom showcases an impressive range of Suzuki motorcycles and scooters, catering to the diverse preferences of customers. Enthusiasts can explore popular models such as the Gixxer, Gixxer SF, and V'Strom 5X, as well as stylish scooters including the Access 125, Burgman Street, and Avenis. The grand opening of the showroom received an overwhelming response from the public, with 66 bookings made on the very first day. As a special offer, every customer who made a booking was presented with a complimentary gold coin, adding to the excitement of their purchase.

With the new showroom, Adharvaa Suzuki aims to provide customers in Coimbatore with a premium experience and a wide selection of Suzuki motorcycles and scooters. Adharvaa Suzuki looks forward to serving the needs of motorcycle and scooter enthusiasts in Coimbatore and surrounding areas, catering to their aspirations for superior performance and style.



*The Chief Guests Hari Krishna, AVP - After Sales, and Mitsumoto Watabe, Senior Manager, Sales & Marketing advisor from Japan with the Dealer, Raju, Adharva Motorcycles Private Limited and the members of the new Adharvaa Suzuki Showroom*

During the inauguration, Hari Krishna, AVP - After Sales at Suzuki, expressed, "Coimbatore already holds a strong brand image for Suzuki, and with the addition of this dealership, we aim to further enhance our market share and provide increased convenience to our customers in the region. The Access and Burgman models have already established a strong reputation in this market. Additionally, our latest introduction, the Avenis, is expected to gain quick traction as well. These three models have gained significant popularity across India, and we are confident that they will receive an equally warm response from customers in Coimbatore."

Krishna also highlighted Coimbatore's enthusiasm for racing events and their warm reception of the Gixxer name. With the inauguration of this new dealership, Suzuki is confident that its presence and influence in Coimbatore will be further strengthened. This dealership exemplifies Suzuki's commitment to delivering an unparalleled experience and meeting the diverse needs of motorcycle and scooter enthusiasts. Suzuki looks forward to serving the community with utmost dedication and ensuring customer satisfaction at every step.

The dealer, Raju, Adharva Motorcycles Private Limited mentioned, "Our dealership is strategically located in the heart of Coimbatore, enabling us to provide convenient sales and service to our valued customers."



# PSG Nursing College Principal Wins 'Best Nurse Educator Award'



*Prof. Jayasudha, Principal of PSG College of Nursing receives the "Best Nurse Educator Award" for the year 2023 at the hands of Thamizhachi Thangapandian, Member of Parliament, Lok Sabha.*

✍ The Covai Mail

In a remarkable achievement, Prof. Jayasudha, the Principal and tenured Professor at PSG College of Nursing, has been honoured with the highly esteemed "Best Nurse Educator Award 2023" for the tireless service rendered by her. The award was presented by the Tamilnadu Nurses and Midwives Council (TNNMC) in Chennai, and recognizes her outstanding contributions and exceptional accomplishments in the field of nursing education.

Jayasudha was selected for this prestigious accolade by a distinguished panel of judges, and the award was conferred upon her at the Grand Muthamizh Peravai event held at T.N Rajarathinam Kalai Arangam, Chennai. The momentous occasion was graced by the presence of Sumathy (a) Thamizhachi Thangapandian, Member of Parliament, Lok Sabha, Government of India, and Prof. Ani Grace Kalaimathy, Registrar of the Tamilnadu Nurses and Midwives Council, Chennai.

The award recognizes Jayasudha's exceptional skills and expertise in nursing education, continuing nursing education, leadership, and her significant contributions as a mentor to numerous students and faculty members over the span of 30 years. Her dedication and commitment to the field has garnered her several other prestigious awards, including the Nursing Excellence Award and the Best Educator Award.

As the Principal of PSG College of Nursing, a renowned institution committed to providing high-quality nursing education, Jayasudha aims to prepare nurses with the highest level of education and practice.

Her exemplary achievements and recognition in the nursing community bring immense pride to the college management, faculty, and students.

The entire PSG College of Nursing community congratulates Prof. Jayasudha on this well-deserved honour and wishes her continued success in her endeavours to advance nursing education and enhance the profession as a whole.

# ASBM organized a Corporate Seminar

✍ The Covai Mail

Adithya School of Business Management (ASBM) recently organized a training session on Capital Budgeting and Investment Banking Career Opportunities. The event was led by Akshay Jayadevan, Relationship Manager at Religare Enterprises Limited, Bangalore.

Jayadevan provided valuable insights into the Capital Market Structure, Investment Banking career opportunities, and its preparation methods.

Sundarapandiyan Natarajan, Director of ASBM, facilitated the program, which was attended by both students and faculty members. The event aimed to equip attendees with the necessary knowledge and guidance to excel in the field of investment banking.

## Expats Settle Easily in India, but Indians Struggle Abroad: HSBC Study

✍ The Covai Mail

HSBC research reveals that international citizens moving to India experience a relatively high level of ease in settling down, with 80% feeling at home in less than a year.

The study also highlights the challenges faced by Indians relocating abroad, as a third of them struggle to assimilate into their new communities. The research emphasizes the importance of efforts to connect with others and experience local culture in helping international citizens feel more at home.

Additionally, HSBC is launching the "Unforeign Exchange" digital community to support people in settling more quickly when moving overseas.

# ELGi inaugurates new manufacturing facility

✍ The Covai Mail

ELGI Sauer Compressors Ltd, a joint venture between Elgi Equipments Ltd and Sauer Compressors Group, inaugurated a new manufacturing facility in Coimbatore.

The 400 million rupees investment will produce high-pressure compressors and other equipment for industrial, commercial shipping, naval, and offshore markets.

The facility includes an Engineering Support Centre for global product development. The eco-friendly factory features energy-efficient systems, water recycling, and a focus on natural light and ventilation.

It also utilizes recycled waste sand for construction and adheres to green building principles.

Speaking at the inauguration, Jairam Varadaraj, Managing Director, Elgi Equipments Limited said, "Looking ahead, agile operations, increased capacity, and local-for-local supply will be essential to supporting our customers, and with this world-class facility ELGI Sauer is well positioned to serve new markets and achieve long-term business goals."

# Career Day at SNMV CAS



*The Chief Guest Ramachandran, Centre Head, State Street HCL Services along with the Subramnai, Principal, presenting offer letters to the students of SNMV CAS*

✍ The Covai Mail

Shree Nehru Maha Vidyalaya College of Arts and Science (SNMV CAS) conducted a 'Career Day' – Job Offer Letter Distribution Ceremony, recently.

Ramachandran, Centre Head - State Street HCL Services was the Chief Guest. Subramnai, Principal felicitated the gathering. Padmanabhan, Dean, Commerce, delivered the welcome address.

The Chief Guest advised the students to learn new skills and distributed 671 job offer letters to the selected students from various companies including Accenture, Infosys, TCS, Wipro etc.

Dinesh, Training and Placement Officer presented the Annual Report in connection with all the activities of Placement Department of the College. The vote of thanks was proposed by Muthukumar, Director, SNMV IM.





To Advertise in THE COVAI MAIL
84898 12341
84895 12341
covaimailads@gmail.com
report2tcm@gmail.com

THE COVAI MAIL

**Disclaimer:** The readers are advised to check with the authenticity of the organisations that are advertising in our newspaper before taking action in any way. The Owner and Publisher of this newspaper are not in any way responsible for the genuineness of the advertisements / advertisers and their products and services. If anybody suffers a loss or damage because of the advertisements published in this newspaper, then the owner, publisher, printer, editor and employees can be responsible under no circumstance as stated earlier.


# New Advanced GroHair & GloSkin Clinic Launched in Erode

✍ The Covai Mail

Advanced GroHair & GloSkin Clinic opens its 17th branch in Erode, meeting increasing consumer demand for hair regrowth and skin treatments.

The clinic offers a wide range of approved treatments, including hair transplants, laser therapy, cosmetic systems, and skin rejuvenation procedures. With state-of-the-art equipment and expert staff, they aim to deliver exceptional results.

The inauguration ceremony was attended by the Chief Guests, Janani Iyer - Celebrity, Vidiyal Sekar- Ex MLA Kangeyam Constituency, Jayaprakash - Director of Cox & Kings Tamil Nadu & their very own esteemed Brand Founder & Managing Director, Saran Vel, and the franchise owners Thirumoorthy Kavitha, Sivakumar, Panayappan, & Adarsh R Govind as well as other staff members of the Clinic.



*The Chief Guests Janani Iyer - Celebrity, Vidiyal Sekar- Ex MLA Kangeyam Constituency, Jayaprakash, TN Director of Cox & Kings and their Managing Director, Saran Vel with the franchise owners*

Reg. No. TNBIL/2014/55455. Postal Registration No: CB/123/2021-23. Owned, Published and Printed by K.C.Srinivasan and published from 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006 and Printed at Sri Saraswathy Printers, 5/1, Athanur Amman Kovil Street, Ganapathy, Coimbatore - 641006. Editor: K.C.Srinivasan